# சிலாங்கூர் இன்று

திருவள்ளுவர் ஆண்டு 2048 / ஹேவிளம்பி ஆண்டு ஐப்பசி மாதம் / அக்டோபர் 2017

www.selangorkini.my  Media_Selangor
selangortv.my  MediaSelangor

SMART SELANGOR




இலவசம்

## பரிவுமிக்க மக்கள் நலத்திட்டங்கள் வெற்றியடைந்தது

" மாநில அரசாங்கத்தின் கொள்கைகள் மூலம் மக்களுக்கு நன்மைகள் சென்று அடைந்துள்ளது. சிலாங்கூரில் பரிவுமிக்க மக்கள் நலத்திட்டங்கள் என 42 திட்டங்களுக்கு ரிம 2 பில்லியனை மக்களுக்கு செலவிட்டுள்ளது. மாநிலத்தின் வளம் மக்களுக்கே திருப்பி தரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது."

SMART SELANGOR

## மந்திரி பெசாரின் தமிழ்நாடு பயணம்

4

### வர்த்தக சங்கங்கள் கிள்ளான் நகராண்மை கழகத்திற்கு ஆதரவு



### மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களின் தீபாவளி வாழ்த்துக்கள்

8&9

### திறன்மிக்க மகளிர் மையத்தின் திறப்புவிழா

IWB

10

### இந்திய இளைஞர் தன்னாற்றல் திட்டங்கள்



13

HAPPY DEEPAVALI

## சிலாங்கூர் மாநில மக்கள் நல அரசாங்கத்தின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்



Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI



இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# உள்நாட்டு பொருளாதாரத்தில் டத்தோஸ்ரீ அஸ்மின் கவனம் VS அமெரிக்கா பொருளாதாரம் குறித்து டத்தோஸ்ரீ நஜிப் கவலை



ஷா ஆலாம் - சிலாங்கூர் மாநிலம் மற்றும் மலேசியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அதனை ஆக்கப்பூர்வமாக நிலைக்கு உயர்த்தவும் சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி தனித்துவ கவனம் செலுத்தி வருகிறார்.அதற்காக அவர் பல்வேறு நாடுகளின் முதலீட்டை கவரும் முயற்சியில் களமிறங்கி அதில் வெற்றியும் கண்டு வருகிறார். அண்மையகாலமாய், ஜப்பான், தைவான், சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் பெல்ஜியம் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்ட சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் அவரது ஒவ்வொரு நாட்டுக்கான பயணமும் சிலாங்கூர் மாநிலத்திற்கு முதலீட்டை கொண்டு வருவதோடு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் தான் என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது.



அதிகமான வெளிநாட்டு முதலீடுகள் அண்மையகாலமாய் சிலாங்கூரில் தொடர்ந்து அதிகரித்து வருவது இம்மாநிலத்தின் தலைமையத்துவமும் அதன் நிர்வாகத்திறனின் ஆளுமைக்கும் தக்க சான்று என்பது குறிப்பிடத்தக்கது. கார் நிறுவனங்கள் முதல் அதிநவீனத்துவ நிறுவனங்களும் தங்களின் முதலீட்டை சிலாங்கூரில் மேற்கொள்வதற்கு மாநில அரசாங்கத்தின் விவேகமான செயல்பாடுகள் பெரும் பங்காற்றி வருகிறது.

அதேவேளையில்,வெளிநாடுகளும் சிலாங்கூர் மாநிலத்தின் வளர்ச்சி அதன் நிலைத்தன்மை மற்றும் பொருளாதார திட்டமிடலை தொடர்ந்து கண்காணித்து வருவதோடு உலக அளவிலான வர்த்தகத்திற்கு சிலாங்கூர் மாநிலம் சரியான தலம் என்பதை கண்டறிந்துள்ள நிலையில் அவர்கள் கவனம் எல்லாம் சிலாங்கூர் மாநிலத்தின் மீது திரும்புயுள்ளது என்லாம்.அதற்கு தக்க சான்றாய் சிலாங்கூர் மாநில அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக வர்த்தக மாநாடு விளங்குகிறது.

தொடர்ந்து சிலாங்கூர் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை இலக்காக கொண்டு மந்திரி பெசார் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்பாடும் நடவடிக்கைகளும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திடும் அதேவேளையில் சிலாங்கூர் வாழ் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் பெரும் பங்காற்றும்.

இந்நிலையில்.நாட்டின் பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் மேற்கொண்ட அமெரிக்கா பயணம் மலேசியர்களுக்கு பெரும் அதிர்ச்சியான ஒன்றாக விளங்கியதோடு அஃது சிலாங்கூர் மாநில மந்திரி பெசாரின் செயல்ப்பாடுகளுக்கு எதிர்மறையான நிலையையும் கொண்டுள்ளது. அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு மலேசியா உதவும் என பிரதமர் கூறியிருப்பது வேடிக்கையாகவே உள்ளது.

மலேசியாவின் இன்றைய பொருளாதார சூழல் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தை நசுக்கிக் கொண்டிருக்கும் நிலையில் நாம் அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு உதவுவோம் என்பது ஐயத்திற்குரியது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பொருளாதார சுமையிலிருந்து மக்களை விடுவிக்கவும் ஆக்கபூர்வ செயல்பாடுகளும் விவேகமான சிந்தனைகளையும் முன் வைக்காத பிரதமர் அமெரிக்காவின் பொருளாதாரத்தை குறித்து கவலைப்படுவது.அவர் தனது பொறுப்பையும் கடமையையும் இன்னும் உணரவில்லை என்றுதான் கூற வேண்டும்.

அமெரிக்காவின் பொருளாதார மேம்பாட்டிற்கு தொழிலாளர்களின் சேமிப்புப் பணமாக இபிஎப் சேமிப்புப் பணத்தை குறி வைப்பதும் ஏற்புடையதல்ல. அஃது தொழிலாளர்களின் உரிமையை உறிஞ்சுவதற்கு ஈடானது.நாட்டில் ரிங்கிட்டின் மதிப்பு நிலையில்லாமல் இருக்கிறது.பொருளாதார நிலையோ மந்தமாய் இருக்கிறது.இச்சூழலில் அமெரிக்காவின் பொருளாதாரம் குறித்து கவலைப்படுவது அர்த்தமற்றது என்பதை மலேசியர்கள் உணர வேண்டும்.

சிலாங்கூர் மாநிலத்தின் பொருளாதார நிலையும் அதன் வளர்ச்சியும் வெளிநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் நாளைய நம்பிக்கையான மலேசியாவை உருவாக்க மக்களுக்கு யார் தேவை என்பதை மக்கள் நன்கு உணர வேண்டும்.மத்திய தேசிய முன்னணி அரசாங்கத்தையும் அதன் தலைவர்களையும் சிலாங்கூர் மாநில அரசாங்கத்துடனும் அதன் ஆக்கபூர்வ தலைமைத்துவத்தோடும் ஒப்பிட்டு, சீர்தூக்கிப்பார்த்து மக்களுக்கான நன்மையையும் திட்டங்களையும் ஏற்படுத்தப் போவது யார்?மக்களுக்காகவே சிந்திக்கும் அரசாங்கம் யார்? என்பதை மக்கள் தான் விவேகமாய் முடிவெடுக்க வேண்டும்.டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலியின் தலைமையிலான அரசாங்கம் மக்களுக்காக பரிவு மிக்க,மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் அக்கறைக் கொண்ட அரசாங்கம் என்பதில் சிலாங்கூர் வாழ் மக்கள் என்றுமே தனித்துவ நம்பிக்கையை கொண்டுள்ளனர் என்பதில் பெருமிதமே.






இவ்வேளையில்,சிலாங்கூர் வாழ் இந்தியர்களை போல நாட்டில் வசிக்கும் அனைத்து இந்தியர்களும் சிந்தனை மாற்றத்திற்கு தயாராகி நாளைய நம்பிக்கையான மாநில அரசாங்கத்தை மட்டுமின்றி மத்திய அரசாங்கத்தையும் தேர்வு செய்ய நாம் கொண்டாடவிருக்கும் தீபாவளித் திருநாளில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். நமது நாளைய தலைமுறை புதிய மலேசியாவில் நம்பிக்கையான மலேசியர்களாய் சிறந்த எதிர்காலத்துடன் பயணிக்க நாம் இன்றே வித்திடுவோம்.

அனைவருக்கும் எங்களின் இனிய மக்கள் தீபாவளி வாழ்த்துகள்!!

*நன்றி,*
***குணசேகரன் குப்பன்***







SK SELANGOR
சிலாங்கூர்
சிலாங்கூர் இன்று செய்திக் குழு

Penasihat
**Lembaga Editorial CCSB**

Ketua Pengarang
**Cecelia Alphonus**

Pengarang
**KGS**

Wartawan
**Chandran Ramasamy**
**Rowthiran**
**Maya**
**Logesh**

Grafik & Reka Cetak
**Su. Ram**

Jurugambar
**Asri Sapfie**
**Raheemie Arifin**
**Shuaib Ayob**

Tel: 03-5523 4856
Fax: 03-5523 5856

Email
**editorselangorindru@gmail.com**

Aras 2, Carlton Holiday Hotel & Suites
No.1, Persiaran Akuatik 13/43, Seksyen 13,
40100 Shah Alam, Selangor Darul Ehsan

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!


Informasi Terkini di jari anda MUAT TURUN PERCUMA APLIKASI

# ஐபிஆர் வெற்றியடைந்ததால் மாநில அரசாங்கம் 2018-இன் வரவு செலவு திட்டத்திலும் தொடர்கிறது

சிலாங்கூர் நிலஅரசாங்கம், பரிவுமிக்க மக்கள் நலத்திட்டங்களை (ஐபிஆர்) 2018-இன் வரவு செலவு திட்டத்தில் தொடர்ந்து செயல்படுத்தும் என்று சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ முகமட் அஸ்மின் அலி கூறினார். இது வரை ஐபிஆர் மூலம் மக்கள் பயன் அடைந்தனர் என்றும் மொத்தத்தில் இத்திட்டம் இமாலய வெற்றி பெற்றதாக குறிப்பிட்டார். மாநில அரசின் கொள்கைகள் மக்களுக்கு நன்மைகள் சென்று அடைந்துள்ளது. மாநிலத்தின் வளம் மக்களுக்கு பல்வேறு திட்டங்களின் வழி பயன் தந்துள்ளது என்று பெருமிதத்துடன் கூறினார்.

"இது மாபெரும் வெற்றி பெற்றுள்ளது இது வரை 42 ஐபிஆர் திட்டங்களின் மூலம் மாநில அரசு ரிம 2 பில்லியனை மக்களுக்கு செலவிட்டுள்ளது. மக்கள் நலத்திட்டங்கள் நல்ல பயன் தந்த நிலையில் எதிர் வரும் 2018-இன் வரவு செலவு திட்டத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்," என்று தாமான் ஸ்ரீ கோம்பாக்கில் நடைபெற்ற 'ஐபிஆர் திட்டங்களை பிரபலமாக்குவோம் மற்றும் சிலாங்கூர் மந்திரி பெசாருடன் மக்கள்' எனும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ,அஸ்மின் அலி 207மக்களுக்கு ரிம 1.06 மில்லியன் மதிப்பிலான ஹிஜ்ரா கடனுதவி, உணவுக் கூடை பற்றுச் சீட்டு மற்றும் பல மாநில அரசின் உதவி நிதிகளை எடுத்து வழங்கினார் என்பது










## 2018 வரவு செலவு: இளம் தலைமுறையின் பொருளாதார வளர்ச்சி கவனம் செலுத்தப்படும்

சிலாங்கூர் மாநிலத்தின் 2018 வரவு செலவு திட்டத்தில் இளம் தலைமுறை பொருளாதாரத் தர முன்னேற்றம் கவனப்படுத்தப்படும் என்று இளைய தலைமுறையின் இளைஞர், விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் தொழில் மேம்பாட்டு ஆட்சி குழு உறுப்பினர் அமீருடின் ஷரி தெரிவித்தார். போட்டித் திறன் கொண்ட மற்றும் மனித வளச் சந்தையின் தேவைகளுக்கு ஏற்ப தன்னைத் தயார் படுத்திக் கொள்ளக் கூடிய இளைஞர்களை உருவாக்க இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கவனம் வைப்பது மிக முக்கியம் என்றார் அமீர். இக்கவனக்குவிப்பு மாநிலத்தின் வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஏற்புடையதாக இருப்பதை உறுதிப்படுத்துவதாகும் என்றார் அவர். இப்புதிய முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டால், இளைய தலைமுறை நீண்ட கால நலன்களைப் பெறுவர் என்று அவர் மேலும் கூறினார்.

"இந்தப் புதிய முன்முயற்சியை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டாலெனில், இன்றையமனித வளத் தேவையைச் சந்திக்க, இளைய தலைமுறையினரின் சமூக வளர்ச்சியை உயரும் வகை செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன் என்றார் அமீர். முன்னதாக, இளைஞர் மேம்பாட்டுக் கொள்கையில் தொழில் முனைவோர் மற்றும் வேலை, தலைமைத்துவம் மற்றும் அமைப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அமைப்பு சம்பந்தப்பட்ட 10 முக்கிய அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன.

இது மேலும் சமூக அம்சங்கள், தன்னார்வ இணைப்பு, கலாச்சாரம் மற்றும் கலைகள், நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியம், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி, மற்றும் மத நம்பிக்கை ஆகியவைகள் உள்ளடங்கியது.

அந்தத் தேவைகளை நடப்புக்குக் கொண்டுவரும் முயற்சிகளை உள்ளூர் இளைஞர் இயக்கிகளை உருவாக்குவதன் மூலம் அடையலாம். இதன் மூலம் போட்டித்திறன் கொண்ட தலைமைத்துவத்தை உருவாக்கி, சிலாங்கூர் இளைஞர் சமூகத்தின் மாற்றத்திற்கு அவர்களைக் கடத்தியாகப் பயன்படுத்தலாம் என்கிறார் அமிருடின்.

## மந்திரி பெசார்: சிலாங்கூர் மாநில மேம்பாட்டில் கவனம் செலுத்துங்கள்



சிலாங்கூர் மக்களின் நன்மையை முன்னிலைப்படுத்தும் நோக்கத்தை முக்கியமாகக் கருதும் மாநில மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ முஹமட் அஸ்மின் அலி, தனிநபர் குற்றசாட்டுகளுக்கு கவனம் செலுத்தாமல் சிலாங்கூர் மாநிலத்தின் மேம்பாட்டில் கவனம் செலுத்தி வருகிறார்.

தற்போது மீன் விலை ஏற்றம் கண்டு இருப்பதற்கு எதிர்க்கட்சி ஆதரவாளர்களான மத்தியஸ்தர்கள் காரணம் என்ற குற்றச்சாட்டுக்கு எதிர்வினை ஆற்றும்வகையில் அஸ்மின் இவ்வாறு பதில் கூறினார். வாழ்வாதார செலவுகள் அதிகரித்து உள்ளது என்பதை அனைவரும் அறிவர். இதற்கு அரசியல் கட்சியை எப்படி குற்றம் சாட்ட முடியும்?

மத்திய அரசாங்க நிலையில் நமக்கு அதிகாரம் இல்லாத போது மக்கள் நலனுக்கான கொள்கைகளை எப்படி அமல்படுத்துவது? என்று அஸ்மின் கேள்வி எழுப்பினார். மாநில அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்ட கொள்கைகளை அமலாக்கம் செய்து வருகிறோம். சிலாங்கூர் மற்றும் பினாங்கு போன்ற மாநிலங்கள் மக்கள் கருணை கொள்கையை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறோம். மாநிலத்துக்கு அப்பால் செயல்படுத்த எத்ரிர்வரும் பொதுத் தேர்தலுக்காக காத்திருக்கிறோம் என்று தாமான் ஸ்ரீ கோம்பாக்கில் உள்ள அல் கைரியா மதுதியில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் கருணை திட்டம் மற்றும் முதலமைச்சருடன் நல்லுறவு என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நிருபர்களுடன் பேசுகையில் அஸ்மின் இவ்வாறு கூறினார்.

மேன்மைத் தங்கிய சுல்தான் சிலாங்கூர் சுல்தான் சாராபுதீன் இட்ரிஸ் ஷா கட்டளைப்படி, மக்கள் வழங்கிய அதிகாரத்தைக் கொண்டு, அவர்களுக்குப் பயனைக் கொண்டு வரும் வகையில் மாநிலத்தை நிர்வாகம் செய்வதே மாநில அரசாங்கத்தின் முக்கியச் செயலாகும். ஏறிவிட்ட விலைவாசியால் மக்கள் வாழ்க்கை இறுக்கத்தில் இருக்கின்றனர். ஆகவே ஆதாரமற்ற, மக்களுக்கு உதவிடாத குற்றச்சாட்டுகளையும், அவதூறுகளையும் வீணே சுமத்த வேண்டாம். பணவீக்கம், பொருட்களின் வரி அமலாக்கம், பொருட்கள் சேவை வரி ஆகிய காரணிகளால் விலை ஏற்றம் கண்டுள்ளது. ஆகவே மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது அரசாங்கத்தின் கடமையாகும் என்றார் அஸ்மின் அலி.

Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# சிலாங்கூரின் வளர்ச்சி அந்நிய முதலீடுகளை கவந்துள்ளது



பத்துகேவ் - சிலாங்கூர் மாநிலத்தின் மேம்பாடும் வளர்ச்சியும் அந்நிய முதலீடுகளின் கவனத்தை ஈர்த்திருப்பதோடு அவர்களின் ஆர்வத்தையும் அதிகப்படுத்தியிருப்பதாக மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி பெருமிதமாய் கூறினார். சிலாங்கூர் மாநிலத்தின் மேம்பாடுகளும் பொருளாதார இலக்கும் பெருமைப்பட வைக்கும் நிலையில் இருப்பதோடு அஃது அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் கருவூலமாகவும் உருவெடுத்திருப்பதாகவும் கூறினார்.



அண்மையில் தமது ஐந்து நாள் இந்தியா பயணம் அதனை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்திருப்பதாக கூறிய அவர் சிலாங்கூர் மாநில மேம்பாட்டையும் வளர்ச்சியையும் அதேவேளையில் அதன் அடைவுநிலையையும் எவ்வாறு உலக ரீதியில் கொண்டு செல்வது என்பதையும் ஆராய்ந்து வரும் நிலையில் உலக ரீதியிலான கைகோர்ப்பு சிலாங்கூர் மாநிலத்தை புதியதொரு தலம் நோக்கி கொண்டு செல்வதோடு அஃது சிலாங்கூர் வாழ் மக்களும், வர்த்தகர்களுக்கும் நன்மையை வழங்குவதோடு சிலாங்கூர் மாநிலம் மற்றும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் பெரும் பங்காற்றும் என்றார்.கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஆய்வுகள் சிலாங்கூர் மாநிலம் முதலீட்டுக்கு பாதுகாப்பான மற்றும் சரியான இடம் என்றும் அடையாளம் காணப்பட்டிருப்பதை பெருமையாக சுட்டிக்காண்பித்த மந்திரி பெசார் பல்லின மக்களும் மத நம்பிக்கையும் கொண்டவர்கள் சிலாங்கூர் மாநிலம் மற்றும் நாட்டின் தனித்துவமாய் விளங்கிடும் நிலையில் அஃது மாநில வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உதவுவதோடு மட்டுமின்றி அந்நிய முதலீடுகளுக்கும் வகை செய்கிறது.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களான தமிழ்நாடு மற்றும் ஐட்ராபாட் ஆகிய மாநிலங்களுக்கு பயணத்தை மேற்கொண்ட நிலையில் அவ்விரு மாநிலங்களின் வளர்ச்சியும் மேம்பாடும் பல்வேறு துறைகளில் இருக்கும் சூழலில் சிலாங்கூர் மாநிலம் அதற்கு ஏற்றவாறு அமைந்திருப்பதால் அவர்களின் முதலீடு இங்கு சாத்தியமே என்றார். அதுபோலவே, அந்நிய முதலீடுகளுக்கு இந்தியாவும் ஆர்வம் காட்டுவது சிறப்பான ஒன்றாக அமைந்திருப்பதாகவும் கூறினார்.

நம்மிடையே மேலோங்கியிருக்கும் விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு மற்றும் உதவும் மனப்போக்கு அந்நிய முதலீடுகளை கவர்ந்திருப்பதாகவும் கூறிய அவர் சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் நிலையான ஆற்றல் மிக்க போக்கும் அந்நிய முதலீட்டின் கவனத்தை தனித்துவமாய் ஈர்த்திருப்பதாகவும் கூறினார். அதேவேளையில், சிலாங்கூர் மாநிலம் சிறந்த மாநிலமாகவும் வளர்ச்சியும் மேம்பாடும் கொண்ட மாநிலமாகவும் உருபெற்றிருக்கும் சூழலில் மக்களும் நன் நிலையிலான பயனையும் நன்மையையும் அடைந்து வருவது பெருமிதமாகவும் சந்தோசமாகவும் இருப்பதாக மந்திரி பெசார் தெரிவித்தார்.









## சிலாங்கூர் வாழ் மக்கள் அஸ்மின் அலியை தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர்

சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ முகமட் அஸ்மின்



அலி, மாநில தலைமைத்துவத்தை வழி நடத்தும் விதம் நம்பகமான முறையில் செயல்படுவதாகவும் தொடர்ந்து மாநிலத்தை ஆட்சி புரிய வேண்டும் என்று சினார் ஹாரியான் நாளிதழின் கருத்துக்கணிப்பு கூறுகிறது நாடு தழுவிய அளவில் 550 பேர்களிடம் ஆய்வு நடத்திய வேளையில் 301 பேர்கள் அஸ்மின் அலியை தேர்ந்தெடுத்தது குறிப்பிடத்தக்கது. சினார் ஹாரியான் நாளிதழின் கருத்துக்கணிப்பில் 54% அஸ்மின் அலியின் நிர்வாகத்தின் மீது நம்பிக்கை வைத்து இருப்பது தெரிய வந்துள்ளது. பல்வேறு மாசுபடுத்தும் செயல்பாடுகள் மற்றும் எதிர்மறையான கருத்துக்கள் அவர் மீது இருந்தாலும் மக்களின் ஆதரவை அஸ்மின் அலி பெற்றுள்ளது அம்னோ தேசிய முன்னணிக்கு பின்னடைவை அரசியல் ரீதியிலும் ஏற்படுத்தி உள்ளது.

"தனது பதவியை எடுத்த ஆரம்ப காலத்தில் முன்னாள் மந்திரி பெசாருடன் ஒப்பீடு செய்யப் பட்டாலும் கெஅடிலான் கட்சியின் துணைத் தலைவரான அஸ்மின் அலி தனது பாணியில் முற்போக்கான நடைமுறையில் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். அரசியல் செயல்பாடுகளை குறைத்துக் கொண்டு மாநில மக்களின் நலனுக்காக கடமையாற்றி வருகிறார் என்று கூறினால் அது மிகையாகாது. பரிவு மிக்க மக்கள் நல திட்டங்கள் செயல்படுத்தி வருவதை மக்கள் கண்கூடாக பார்க்கிறார்கள்." என்று நாளிதழின் கருத்துக்கணிப்பு தெரிவித்து உள்ளது.

இலவச குடிநீர் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து அமல்படுத்தி வருவது மாநில அரசாங்கம் மக்களின் சுமையை குறைக்க உதவுவதாக பொது மக்கள் கருதுகிறார்கள் என்று ஆய்வு காட்டுகிறது.

"விவேக மாநிலம்" என்று கருபொருள் கொண்டு செயல்படும் சிலாங்கூர் மாநிலம் ஸ்மார்ட் சிலாங்கூர் இலவச பேருந்து, இலவச இணையதள சேவை மற்றும் குப்பைகளை அகற்றும் நவீன செயல்பாடுகள் மாநில மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

மாநில அரசாங்க ஊழியர்களுக்கு இரண்டு மாத போனஸ் வழங்கியது, பரிவு மிக்க மக்கள் நல திட்டங்கள் மற்றும் அபரித பொருளாதார வளர்ச்சி போன்றவை அஸ்மின் அலி மீது வாக்காளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது," என்று சினார் ஹாரியான் நாளிதழின் கருத்துக்கணிப்பு அறிக்கை கூறுகிறது.

சரவாக் பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் இணைப் பேராசிரியர் முனைவர் ஜெனிரி அமீர் அஸ்மின் அலியின் தலைமைத்துவம் மாநில அரசாங்கத்தின் நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது என்று கருத்துரைத்தார்.




இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



மக்களால் நாம்.. மக்களுக்காக நாம்..
Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI

# வரவு செலவு திட்டம் 2018: சிலாங்கூர் 2 சிறப்பு வீடமைப்பு திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது



சிலாங்கூர் மாநில அரசாங்கம் குறைந்த வருமானம் பெறும் தனிநபர் வீடு வாங்குவதற்கு இரண்டு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்கிறது என்பதை சிலாங்கூர் மாநில வீடமைப்பு, கட்டிட நிர்வாகம் மற்றும் நகர்புற ஆட்சிக் குழு உறுப்பினர் டத்தோ இஸ்கண்டர் அப்துல் சமத் சுட்டிக் காட்டினார்.

இதன் மூலம் சிலாங்கூர் மாநில அரசாங்கம் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதை கண்கூடாக பார்க்கிறோம்.

" இது தேர்தல் காலத்திற்கான வாக்குறுதி அல்ல, மாறாக மாநில அரசாங்கம் தொடர்ந்து மக்களுக்கு எந்நேரத்திலும் சேவை செய்து வருவதை காட்டுகிறது," என்று சிலாங்கூர் இன்றுக்கு கூறினார்.

இதற்கு முன்பு சிலாங்கூர் மாநில அரசாங்கம் 'ஸ்மார்ட் ஹோம் பயர்ஸ்' திட்டத்தை அறிமுகப்படுத்தி குறைந்த வருமானம் பெறும் தனிநபர், வீட்டின் வைப்பு தொகையை கட்டுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இஸ்கண்டர் மத்திய அரசாங்கத்தை பேங்க் நெகாராவின் வங்கிக் கடன் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். சிலாங்கூர்க்கு வீடுகள் வாங்கும் நபர்கள் பலர் வங்கிக் கடன் கிடைக்காமல் தத்தளிக்கும் நிலை ஏற்படுகிறது என்று சுட்டிக் காட்டினார்.

**உரப்பாசன தொழில்நுட்பம்: விவசாய தொழில் முனைவர்களுக்கு உதவுகிறது**

# மக்கள் சுமையைக் குறைக்கும் விவேகச் சிலாங்கூர் இலவச பேருந்து சேவை




செலாயாங் நகராண்மைக் கழகம் வட்டாரங்களில், இரண்டாவது பாதைத் திட்டத்திற்கான விவேக சிலாங்கூர் இலவசப் பேருந்து சேவை (எம்பிஎஸ்2) அமலாக்கத்திற்காக மாநில அரசாங்கம் ஆண்டுக்கு 1.25 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் ஜூலை 26 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ரவாங்கில் உள்ள டெஸ்கோ ஹைபெர்மார்கெட்டில் தொடங்கி ரவாங் ரயில் நிலையம், பேருந்து நிலையம், டெக்சி நிலையம் வரை ஏற்படுத்தப்பட்டிருக்கும் புதிய வழித்தடம் ஒதுக்கப்பட்டிருக்கும் மாநில அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது இச்சேவை மக்களின் சுமையைக் குறைக்கும் திட்டமாகும் என்றார் முதலீடு, தொழிற்துறை, வணிகம் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தேங் சான் கிம்.

எம்பிஎஸ் வருடத்திற்கு RM626,460 வெள்ளிச் செலவில் எம்பிஎஸ்1 வழித்தடத்தில் இரண்டு பேருந்துகள் போக்குவரத்து சேவையில் பயன்படுத்தப்படுவதாக அவர் கூறினார். விலைவாசிகள் ஏற்றங்களால் மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்திருப்பதால் அதனைக் குறைக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்த இலவசப் போக்குவரத்துச் சேவையை மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் கூறுகையில் "பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் இது முதல் படியாகும் என்றும் மற்றும் இதனால் சாலை நெரிசலைக் குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று இங்கு நடந்த MPS சிலாங்கூர் ஸ்மார்ட் பஸ் ரூட் 2 துவக்க விழாவில் கலந்து கொண்டு நிருபர்களுடன் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

எம்பிஎஸ்2 வழித்தடம், டெஸ்கோ ரவாங் இருந்து தொடங்குகிறது. PKNS வீடுகள் 16ஆவது மைல், தாமான் கஞ்சிங், தாமான் துன் தேஜா, பெரிங்கின் அடுக்குமாடி, அழ-ராடியா மதுதி, ரவாங் ரயில் நிலையம், ரவாங் மைதீன், ரவாங் பேருந்து மற்றும் டெக்சி நிலையம் ஆகிய பகுதிகளைச் சுற்றி வருகிறது.

இச்சேவை காலை 6 மணியிலிருந்து இரவு 8 மணிவரை 4 பேருந்து சேவைகளுடன் தொடங்குகிறது. வைஃபை, மூடிய சுற்று கேமரா (சிசிடிவி) பொருத்தப்பட்ட பயணி தகவல் அமைப்பு (PIS) மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அடிப்படைத் தேவைகள் போன்ற வசதிகள் பேருந்து சேவையில் உள்ளன.

விவேக சிலாங்கூர் பஸ் எம்.பி.எஸ் வழித்தடங்கள், மற்ற பொது போக்குவரத்து அமைப்புச் சேவைகளையும் இணைக்கிறது. எம்பிஎஸ் 1 வழித்தடத்தில் லைட் ரெயில் டிரான்சிட் (எல்ஆர்டி) டெர்மினல் புத்ரா கோம்பாக், ரவாங் கம்யூட்டர் ஆகிய பகுதிகளையும், எம்பிஎஸ் 2 வழித்தடம் ரவாங் கம்யூட்டர் நிலையத்தையும் இணைக்கிறது. எம்பிஎஸ்2 வழித்தடம், 2017-இல் சிலாங்கூர் மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்ட 15 புதிய வழித்தடங்களில் ஒன்றாகும்.

2014-இல் , விவேக சிலாங்கூர் பஸ், அதிகமான இலவச பேருந்து (100) சேவைக்கான மலேசிய கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.



# சிலாங்கூரில் முதலீடு அதிகரிப்பு

சிலாங்கூரில் தனது வர்த்தகத்தை மேற்கொண்டு வரும் அமெரிக்க முதலீட்டு நிறுவனம் ஒன்று அதன் வர்த்தகத்தை மேலும் விரிவாக்கம் செய்வதோடு அதன் முதலீட்டையும் அதிகரிக்க முன் வந்துள்ளது என மந்திரி பெசார் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி குறிப்பிட்டார். மிக குறுகிய காலக்கட்டத்தில் அந்த முதலீடு அதிகரிப்பு நிகழப்போவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதுகுறித்த வெளிப்படையான பகிர்வினை தாம் வெளியிடுவதாக கூறிய அவர் சம்மதப்பட்ட நிறுவனம் தற்போது இங்கு தன் வர்த்தகத்தை மேற்கொண்டு வரும் நிலையில் சிலாங்கூர் மாநிலம் முக்கிய வர்த்தக மையமாக உருமாறி வரும் நிலையில் அந்நிறுவனம் அதன் முதலீட்டை அதிகரிக்க முன் வந்திருப்பதாகவும் கூறினார். இந்த முதலீட்டு அதிகரிப்பினை மாநில அரசு மகிழ்ச்சியோடு வரவேற்பதாகவும் அஃது விரைந்து நிகழ வேண்டும் என்றும் கூறினார்.

இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஆக்கபூர்வமான ஒப்பந்தங்களுக்கு பின்னர் வெளியிடப்படும் என்றும் கூறிய மந்திரி பெசார் அவை அக்டோபர் மாதம் தொடக்கத்தில் நிகழலாம் என்றார். சம்மதப்பட்ட நிறுவனம் தனது அலுவலகத்திற்கு நேரில் வந்து தங்களின் வர்த்த முதலீடு அதிகரிப்பு குறித்து பேசியது மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறினார். இருப்பினும், சம்மதப்பட்ட நிறுவனம் தங்களின் முதலீட்டு ஏதுவாக நிலப்பரப்பளவு தேவைப்படுவதாகவும் அதற்கு மாநில அரசின் உதவியை நாடியிருப்பதையும் சுட்டிகாண்பித்த அவர் இது தொடர்பில் அடுத்தக்கட்ட நவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவிற்கு தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சம்மதப்பட்ட நிறுவனம் விண்வெளி தொடர்பிலான துறைசார்ந்தது என்றும் அதன் உற்பத்தி, பராமரிப்பு ,பழுது மற்றும் செயல்பாடு ஆகியவை அதில் அடங்கும் என்றும் தெரிவித்த மந்திரி பெசார் இது தொடர்பில் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இதுவொரு முக்கிய முதலீடாக இருப்பதால் இது குறித்து விரைந்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறிய அவர் இதற்கு முன்னதால ஐகேஇஏ (IKEA) நிறுவனத்தின் 1 பில்லியன் முதலீடு குறித்து மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு கையொப்பம் குறித்தும் விளக்கினார்.

சம்மதப்பட்ட நிறுவனம் அதன் மிக பெரிய கொள்முதல் மையத்தை இங்கு அமைக்கவிருப்பதோடு அதன் மூலம் அஃது ஆசியா பசிபிஃகில் மாபெரும் வர்த்தக நடவடிக்கையினை மேற்கொள்ளவிருப்பதாகவும் கூறினார். இஃது அந்நிறுவனத்தின் மிக பெரிய பொருள் வைக்கும் கிடங்காக அமையும் என்றும் மந்திரி பெசார் கூறினார்.

# பொதுச் சேவைத் துறை ஊழியர்களின் தேவைகளை அம்னோ -பிஎன் அறிந்திருக்கவில்லை



எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்தால் அரசாங்க ஊழியர்களின் எதிர்காலம் மோசமடையும் என்று பிரதமர் நஜிப் துன் ரசாக்கின் எச்சரிக்கையை கவனப்படுத்துவதாக கெஅடிலான் கட்சியின் தேசிய கௌரவச் செயலாளர் டத்தோ சைபுடின் நசுத்தியோன் பத்திரிகை அறிக்கை விடுத்துள்ளார் அரசாங்க ஊழியர்களுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள உறவு பலமாக இருப்பதாக நஜிப் நினைத்திருப்பது மலை ஏறிவிட்டது.

நடப்புச் சூழலில் பொதுத் துறையில் பணிசெய்யும் ஊழியர்களுக்கு அரசாங்கத்துடனான உறவு கசந்துவிட்டது ,குறிப்பாக நடுத்தர மற்றும் கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் பல காரணங்களை முன்னிட்டு அம்னோ- தேசிய முன்னணியின் மேல் காட்டமாகவும் ஏமாற்றத்துடனும் உள்ளனர் என்று சைபுதீன் பத்திரிகை அறிக்கையில் கூறினார்.

அரசாங்க ஊழியர்கள் அல்லல் படுகின்றனர். அவர்களுக்கு உரித்த சலுகைகளை நீக்கியது ,பொருட்கள் வரியை விதித்தது போன்ற அரசாங்கத்தின் முடிவுகளினால் வாழ்வாதாரத்துக்குச் சுமையைச் சேர்த்துக் கொண்டிருக்கும் அம்னோ-தேசிய முன்னணியின் மேல் அவர்கள் கோபமாகவும் வெறுப்புற்றும் இருக்கின்றனர் என்று சைபுதீன் கூறினார்.

உண்மையிலேயே அம்னோ தேசியமுன்னணியின் அரசாங்கம் நேர்மையாகவும் ,வெற்றியுடனும் செயல்பட்டிருந்தால் அரசாங்க ஊழியர்களின் ஆதரவு குறைவதற்கு அச்சப்படத் தேவை இருக்காது வெற்றிபெற்றவுடன் மக்களை குப்பைகளாக்கி , அனைத்துத் திட்டங்களையும் அவர்களின் சகாக்களுக்கு மட்டுமே தந்து வருவது நன்றி மறக்கும் குணம் அம்னோ தேசிய முன்னணிதான் ,அரசாங்க ஊழியர்கள் அல்ல என்பதை சைபுதீன் வலியுறுத்திக் கூறினார்.

அரசியல் தலையீடு முடிவுக்கு வராத சமூக நலன் போன்றவைகள் அரசுப் பணியாளர்களை சிறைப்படுத்துகிறது. பொதுத் துறையில் மாற்றங்களைக் கொண்டுவரும் சக்தி அரசாங்க ஊழியர்களுக்கு உண்டு. வரும் பொதுத் தேர்தலில் இவர்களின் ஓட்டு அந்த மாற்றங்களைப் பொதுத் துறையிலும் நாட்டுக்கும் கொண்டு வரும் என்று சைபுதீன் தெரிவித்தார்.

அஸ்மின் அலி: ஜமாலின் நடவடிக்கை பண்பற்றது

# 1எம்டிபி சர்ச்சையில் மீண்டும் ஒரு திருப்பம்




1எம்டிபி ஊழல் தொடர்புடைய, கோல்ட்மேன் சாச்ஸ் வங்கியின் முன்னாள் பணியாளர் டிம் லீஸ்னர் அமெரிக்கா நிதி பாதுகாப்பு தொழில் துறையில் ஈடுபடுவதிலிருந்து தடை விதிக்கப்பட்டுள்ளார். முன்னர் சிங்கப்பூரில் பணிபுரிந்த டிம் லீஸ்னர் ,நிதி தொழில்துறை கட்டுப்பாடு ஆணையத்தின்( Finra) அதிகாரிகளால் கடந்த செப்டம்பர் -11இல் தடைவிதிக்கப்பட்டதாக வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் அறிக்கை தெரிவித்தது.

2016ன் ஆரம்பத்தில் ,கோல்ட்மேன் சாக்ஸை விட்டு வெளியேறியதற்கான தொடர்புடைய தகவல்களை அவர் சமர்ப்பிக்கத் தவறியதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய பிராந்தியம் வங்கித் தலைவராக டிம் லீஸ்னர் பொறுப்பு வகித்தார். பல பில்லியன் டாலர்கள் இழப்புத் தொடர்பில் ,அமெரிக்காவின் நீதி முக்கியமான நபர் என அழைக்கப்படும் லோ டேக் ஜாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் அதிகாரமற்ற கடிதத்தை வெளியாக்கினார். 1 எம்டிபி மற்றும் இந்தோனேஷியாவில் சுரங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகவும் பிறகு கடந்தாண்டு வங்கி பணியிலிருந்து வெளியேறியதற்காகவும்கோல்ட் மேன் லீஸ்னரை பணியிலிருந்து நீக்கியது.

# ரிம100 மில்லியன் ஊழல் சம்பவத்தை எம்ஏசிசி அம்பலப்படுத்துமா?

ஓர் அமைச்சகத்தின் உயர் அதிகாரிகளால் களவாடியதாகக் கூறப்படும் 100 மில்லியன் ரிங்கிட் திருட்டுச் சம்பவமத்தை மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் (எம்ஏசிசி) அம்பலப்படுத்துமா? வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள ஏழைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை, அவ்வமைச்சகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி களவாடியதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.



மிக விவேகமான முறையில் கையாளப்பட்டிருக்கும் இத்திருட்டை விசாரணை செய்து வரும் லஞ்ச ஒழிப்பு ஆணையம் பல சவால்களை எதிர் நோக்கி வருவதாக நியூஸ் ஸ்ட்ரேட் டைம் ஆங்கிலப் பத்திரிகை தகவல் தெரிவித்துள்ளது. யாரும் மோப்பம் பிடிக்க முடியாத வண்ணம் கொள்ளையடித்தவனின் திருட்டுச் செயல் மிகவும் தந்திரமாகவும், கவனமாகவும் கையாளபட்டிருப்பதாக பத்திரிகை சிறப்பு செய்தி கூறுகிறது.

சொந்த கணக்கில் பணப் பரிவர்த்தனை நடந்திருப்பதாக பேங்க் நெகரா மலேசியாவின் 'சந்தேகத்துக்குரிய பரிவர்த்தனை அறிக்கை' கூறுகிறது. இந்த அறிக்கையின் மூலம் பெயரிடப்படாத ஐந்து சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். வெளியான அறிக்கைபடி மோசடிக்கு பலியான திட்டங்களில் ஏழை மாணவர்களுக்கான உணவு உதவித் திட்டமும் அடங்கும். இதுவரை நாடு எதிர்நோக்கிய ஊழல் சம்பவங்களில் இச்சம்பவம் அனைத்துக்கும் பெரிய ஊழல் சம்பவமாக அமையும் என்று பத்திரிகை கோடிகாட்டியுள்ளது.

கடந்த ஆண்டு, 100 மில்லியன் ரிங்கிட் நிதி மோசடியில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் ஒன்பது மூத்த அதிகாரிகளை ஊழல் தடுப்பு ஆணையம் கைது செய்தது. பொது வசதி பொது நலம் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை 10 நிறுவனங்களுடன் சேர்ந்து மோசடி செய்த குற்றத்திற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை ஒப்பந்தங்கள் படி பணிகள் பூர்த்தியாகிவிட்டதாகச் சொல்லி அமைச்சிடமிருந்து பணம் பெறப்பட்டது. ஆனால் அதற்கான வேலை தொடங்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

சிலாங்கூர் அரசாங்கம் வரிவிலக்கும் வேளையில், வரிவிதிக்கும் மத்திய அரசாங்கம்

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



மக்களால் நாம்.. மக்களுக்காக நாம்..

Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI

# கிள்ளான் வர்த்தகர் சங்கமும் — வவாசான் சிறுத்தொழில் வர்த்தகர்கள் சங்கமும் கிள்ளான் நகராண்மைக் கழகத்திற்கு ஆதரவு



கிள்ளான் - கிள்ளான் நகராண்மைக் கழகம் (எம்பிகே) மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கிள்ளான் வர்த்தகர் சங்கமும் வவாசான் சிறுத்தொழில் வர்த்தகர்கள் சங்கமும் ஆதரவு கொடுப்பதாக அதன் தலைவர்களான திரு.என்.பி.இராமன் மற்றும் திரு.தர்மா ஆகியோர் தெரிவித்தனர். அவர்கள் எம்.பி.கேவின் தலைவர் டத்தோ யாசிட் பின் பிடின் அவர்களை சந்தித்துப் பின்னர் இதனை தெரிவித்தனர்.

அதேவேளையில், அண்மையில் கிள்ளான் நகராண்மைக் கழகத்திற்கு வருகை அளித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு எதிராக கண்டனம் தெரிவித்த அவர்கள் இம்மாதிரி ஆர்ப்பாட்டம் செய்வதால் எதுவும் நடக்கப் போவதில்லை என்றும் சுமூகமாய் பேசி தீர்க்க வேண்டிய விவகாரத்தை தனிப்பட்ட காரணியங்களுக்காக ஆர்ப்பாட்டம் செய்து கிள்ளான் நகராண்மைக் கழகத்தின் மீது தவறான தோற்றத்தை ஏற்படுத்த முனைவது அர்த்தமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. கிள்ளான் நகராண்மைக் கழகத் தலைவரோடு மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் போது தீபாவளியை முன்னிட்டு தெங்கு கிள்ளான் பகுதியை வண்ண விளக்குகளால் ஒளியூட்டும்படியும் தோரணங்களால் பிரகாசப்படுத்தும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டதோடு தெங்கு கிள்ளானாவை பாரம்பரியம் மிக்க சூழலுக்கு உருவாக்கும் படியும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கிடையில், தீபாவளி காலத்தில் தெங்கு கிள்ளானாவில் அதிகமான வாடிக்கையாளர்கள் வருகை புரிய விருக்கும் நிலையில் அவர்கள் நிறுத்தி வைக்கும் கார்களை இழுத்து செல்லும் நடவடிக்கையினை எம்பிகே தற்காலிகமாய் நிறுத்தி வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்ட அவர்கள் தீபாவளிக்கு பின்னர் தவறான இடத்தில் கார்களை நிறுத்தியவர்களுக்கு எதிராக குறைவான கட்டணத்தை விதிக்கும்படியும் கோரிக்கை வைத்தனர்.





தொடர்ந்து நடைபெற்ற சந்திப்பில் தெங்கு கிள்ளானாவில் தீபாவளிக்கு வியபாரம் செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்கு 50 விழுகாடு கழிவினை கொடுத்த எம்பிகேவை பாராட்டியதோடு அஃது பரிவு மிக்க செயல்பாடு என்றும் அவர்கள் தெரிவித்தனர். இச்சந்திப்பின் போது எம்பிகேவின் லைசன்ஸ் பிரிவு தலைமை அதிகாரி, சுகாதார துறை தலைமை அதிகாரி ஆகியோருடன் இந்திய கவுன்சிலர்களும் உடன் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிலாங்கூர் அரசை மாசுப்படுத்த தெங்கு கிள்ளான் கருவியாக்கப்படுகிறது

கிள்ளான் - மக்களின் பெரும் ஆதரவை பெற்று மக்களின் நம்பிக்கைகுரிய அரசாக விளங்கிடும் சிலாங்கூர் மாநில அரசாங்கத்தை மாசுப்படுத்த சில தரப்பினர் தெங்கு கிள்ளானாவை ஒரு கருவியாக பயன்படுத்துகிறார்கள். தெங்கு கிள்ளானாவை பயன்படுத்தி இந்தியர்கள் மத்தியில் உணர்ச்சியை தூண்டி சில அநாவசிய நபர்கள் அரசியல் லாபம் தேட முற்படுவதோடு அவர்கள் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலியின் தலைமையிலான சிலாங்கூர் அரசாங்கத்தை மாசுப்படுத்தும் நோக்கத்தோடும் செயல்படுகிறார்கள். சிலாங்கூர் மாநில இந்தியர்கள் அரசியல் சிந்தனையும் விவேகமான பார்வையையும் கொண்டிருப்பதால் தெங்கு கிள்ளானை பயன்படுத்தி மாநில அரசை மாசுப்படுத்த நினைப்பது அர்த்தமற்றது. அவர்களின் எண்ணமும் ஈடேறாது என்பது குறிப்பிடத்தக்கது. உணர்ச்சிகளுக்கு அடிமையாகி ஆவேசப்படும் இந்தியர்கள் இன்று இல்லை. விவேகமாக சிந்தித்தும் உண்மையை ஆராய்ந்து சீர்தூக்கி பார்த்து செயல்படும் இந்தியர்கள் மேலோங்கி விட்டதால் தெங்கு கிள்ளானை வைத்து மாநில ஆட்சியை மாசுப்படுத்த நினைப்பதும் மாநில அரசாங்கத்தின் மீது தவறான தோற்றத்தை உருவாக்குவதும் மக்கள் மத்தியில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தாது. சிலாங்கூர் அரசாங்கம் மக்களுக்கான தனித்துவ அரசாங்கமாக விளங்குவதோடு மாநில அரசாங்கத்தின் சமூக நலத் திட்டங்கள் மக்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# குப்பைகள் தொடர்பிலான புகார்கள் செலாயாங்கில் தொடர்ந்து குறைந்து வருகிறது



செலாயாங் - குப்பைகளை அகற்றும் பணியினை மேற்கொண்டு வரும் கே.டி.இ.பி வேஸ்ட் (KDEBWM) மேனஜ்மேன் நிறுவனத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பதோடு அஃது நன் நிலையில் பங்களித்துவம் வழங்குவதாகவும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஹிஹான் யோங் ஹியான் வா தெரிவித்தார். சம்மதப்பட்ட நிறுவனத்தின் ஆக்கப்பூர்வ பணிகளால் செலாயாங் வட்டாரங்களில் குப்பைகள் குறித்த புகார்கள் தொடர்ந்து குறைந்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். தொடர்ந்து புகார்கள் செலாயாங் நகராண்மைக் கழகத்தில் குறைந்து வருவதோடு சுற்றுச்சூழலின் தூய்மையும் அழகியலும் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டும் தரம் உயர்ந்தும் வருவதாக கூறிய ஆட்சிக்குழு உறுப்பினர் இந்த ஆய்வு கடந்த மார்ச் மாதம் அந்நிறுவனம் இப்பணியினை மேற்கொண்டது முதல் வரையறுக்கப்பட்டதாகவும் கூறினார். கடந்த மார்ச் மாதம் 1300ஆக இருந்த புகார்கள் தொடர்ந்து குறைந்து தற்போது ஆகஸ்ட் மாதம் அவை 36 ஆக மட்டுமே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், சம்மதப்பட்ட நிறுவனத்திற்கும் அதன் துணை குத்தகை நிறுவனங்களுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்த ஆட்சிக்குழு உறுப்பினர் இந்நிலை தொடர்ந்து நிலைக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

செலாயாங் நகராண்மைக் கழக வளாகத்தில் நடைபெற்ற மாநில அரசு மற்றும் சம்மதப்பட்ட நிறுவனத்திற்கிடையிலான புரிந்துணர்வு கையொப்பம் நிகழ்வின் போது அவர் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ந்து அந்நிறுவனத்திற் இன்னும் 7 ஆண்டுகளுக்கான குத்தகையை ஒப்புதல் அளித்திருக்கும் நிலையில் செலாயாங் நகராண்மைக் கழகம் புதியதொரு இலக்கை நோக்கி பயணிக்கும் என நம்பிக்கை தெரிவித்த அவர் இந்நிகழ்வின் போது குப்பைகளை அகற்ற ஜப்பான் நாட்டின் தயாரிப்பான அதிநவீன குப்பைகள் அகற்றும் லாரிகளும் ஒப்படைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அதிநவீன குப்பை அகற்றும் லாரிகளின் செயல்பாட்டினால் செலாயாங் நகராண்மைக் கழகம் தூய்மையாகவும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் நிறைந்த நகராண்மைக் கழகமாகவும் உருவெடுக்கும் என்பதில் ஐயமில்லை என்றார். வழங்கப்பட்ட அனைத்து லாரிகளின் செயல்பாடுகளும் அதன் செல்லும் பாதைகளும் அதிநவீன கருவிகளால் (எவிஎல்எஸ்) மூலம் கண்காணிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் ஐ-கிளின் செயல்முறை திட்டத்தின் கீழ் சம்மதப்பட்ட தனியார் நிறுவனம் அதன் செயல்பாட்டினை மேற்கொள்வதோடு புகார்கள் இல்லாத நகராண்மைக் கழகமாய் செலாயாங் நகராண்மைக் கழகத்தை உருவாக்கும் இலக்கையும் கொண்டிருக்கும் என்றார். இஃது சிலாங்கூர் மாநிலத்தின் ஸ்மார்ட் சிலாங்கூர் திட்டத்தின் கீழ் நிலைக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI

# சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களின் தீபாவளி பெருநாள் நல்வாழ்த்துக்கள்

### ஒற்றுமையும் புரிந்துணர்வும் மேலோங்க வேண்டும்

பல்லினம் வாழும் மலேசிய நாட்டில் நாம் அனைவரும் ஒவ்வொருவரின் மத நம்பிக்கையையும் அவர்களின் பண்பாடுகளையும் சமய நம்பிக்கைகளையும் மதித்தல் என்பது நாட்டின் அமைதிக்கும் சுபிட்சத்திற்கும் வழிகோலும். அவ்வகையில் இந்துக்கள் கொண்டாடவிருக்கும் தீபாவளி பண்டிகையை நாம் அனைவரும் ஒற்றுமையோடும் புரிந்துணர்வோடும் கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும். நாட்டில் கொண்டாடப்படும் ஒவ்வொரு பண்டிகையும் ஒரு இனத்தை சார்ந்து இருந்தாலும் அஃது மலேசியாவின் பண்டிகையாக நாம் கருதி மகிழ்ச்சியாகவும் இன்பம் சூழ்ந்தும் கொண்டாடிட அனைத்து இந்துக்களுக்கும் இனிய தீபாவளி திருநாள் வாழ்த்துகள்.



***டத்தோ இஸ்கண்டார் பின் அப்துல் சமாட்***
செம்பாக்கா சட்டமன்ற உறுப்பினர், வீடமைப்புதுறை,கட்டிட நிர்வாகம் மற்றும் நகர்புற நல்வாழ்வு துறையின் ஆட்சிக்குழு உறுப்பினர்.

### ஒன்றுப்பட்டு கொண்டாடும்

இந்துக்களின் வாழ்வில் மிகவும் அர்த்தம் நிறைந்த வகையில் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிக்கையினை நாம் அனைவரும் ஒரே சிந்தனையோடு ஒன்றுப்பட்டு கொண்டாட வேண்டும். தீப ஒளியில் அறியாமை நீங்கி,தீயவை அகன்று மற்றும் வாழ்வில் இருள் நீங்கு அனைத்து இந்துக்களும் மகிழ்ச்சி பொங்க இத்தீபத்திருநாளை கொண்டாடி இனிய வாழ்த்துகள்.

தீபத்திருநாளில் நாம் அனைவரும் ஒரே அணியாய் திரண்டு வெற்றியை உறுதி செய்து நாட்டின் மேம்பாடு மற்றும் வளர்ச்சியில் உயிர்ப்பித்து பல்லினம் வாழும் நாட்டில் ஒற்றுமையும் புரிந்துணர்வும் மேலோங்க வைப்பதில் தீபாவளி திருநாள் பெரும் பங்காற்றும்.

நம்மிடையே நிலவிடும் ஒத்துழைப்பும், விவேகமான சிந்தனை மற்றும் ஒற்றுமையும் ஒருவருக்கு ஒருவர் மத்தியில் உயிர்க்கொண்டிருக்கும் மரியாதையும் தொடர்ந்து நிலைக்கொள்ள தீபாவளி திருநாள் நிலைக்கொள்ளட்டும்.



அதேவேளையில், இந்த தீபத்திருநாள் நாம் அனைவரின் வாழ்க்கையிலும் அன்பையும், சந்தோசத்தையும் கொடுத்திட அனைத்து இந்துக்களுக்கும் இனிய தீபாவளி வாழ்த்துகள்.

***டத்தோ தேங் சாங் கிம்***
சிலாங்கூர் மாநில நிரந்திர ஆட்சிக்குழு உறுப்பினர்



### தீயதை அகற்றி நல்லதை மீட்போம்

தீபாவளி திருநாள் இந்துக்களின் முதன்மை பண்டிகையாக இருந்தாலும் அஃது மலேசியா போன்ற பல்லினம் வாழும் நாட்டில் ஒரு நாட்டின் கொண்டாட்டங்களின் ஒன்றாக திகழ்கிறது. இந்த தீபத்திருநாளில் தீயதை ஒழித்து நல்லதை மீட்க வேண்டும்.தீபாவளி மலேசியாவில் மட்டுமின்றி உலக நிலையில் சுமார் 1 பில்லியன் இந்துக்கள் கொண்டாடுகிறார்கள் என்பது பெருமிதமானது

இருள் நீக்கி இன்பம் பொங்கிடும் தீபாவளியில் நாம் அனைவரும் மனம் சோர்ந்து விடாமல் விடாமுயற்சியால் வெற்றியினை எட்ட வேண்டும்.இந்துக்கள் மட்டுமின்றி அனைத்து மலேசியர்களும் இந்த தீபத்திருநாளில் நலம் பெற்று சகல இன்பங்களுடன் உயிர்ப்பிக்க வேண்டும்.தீபாவளியை இந்துக்கள்பெருநாளாக எண்ணாமல் மதம், இனம்,நிறம் கடந்து நாம் அனைவரும் மலேசியர்களாக கொண்டாட வேண்டும்.

இந்நிலையில்,சிலாங்கூர் மாநில அரசாங்கம் மக்களுக்காக தொடர்ந்து மேற்கொண்டு வரும் பரிவு மிக்க திட்டங்கள் ஒரு இனத்தை சார்ந்து இல்லாமல் சிலாங்கூர் வாழ் மக்கள் அனைவரின் நலனிலும் அக்கறை கொண்டதாக இருக்கிறது.மாநில அரசாங்கத்தின் இத்திட்டத்தின் இந்துக்களும் இந்தியர்களும் ஒருபோது விடுப்படவில்லை. தகுதியானவர்களுக்கு அத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து நன்மைகள் வந்தடைந்துக் கொண்டுதான் இருக்கிறது.

இந்துக்கள் மற்றும் இந்தியர்கள் மத்தியில் எழுந்துள்ள சிந்தனை மாற்றமானது மாபெரும் சக்தியாக உருவெடுத்திருக்கும் நிலையில் அந்த சிந்தனை மாற்றம் அரசியல் ரீதியில் புதியதொரு மாற்றத்திற்கு வித்திட்ட இந்த தீபாவளியில் இருள் நீங்கி ஒளியூட்ட வேண்டும் என்றும் எனது இனிய தீபாவளி வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு அமிருடின் பின் ஷஹாரி***
பத்துகேவ் சட்டமன்ற உறுப்பினர் மாநில இளைஞர் விளையாட்டு மற்றும் பண்பாடுத்துறை ஆட்சிக்குழு உறுப்பினர்.



## மாண்புமிகு சய்டி அப்துல் தாலிப்

இவ்வருட தீப திருநாளைக் கொண்டாட இருக்கும் அனைத்து இந்துக்களும் சாலை விதிகளை கடைப்பிடித்து பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் குடும்பத்துடன் அனைவரும் சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் இத்தீப திருநாளை கொண்டாட வேண்டும் என்று தனது வாழ்த்துப் செயதியில் மாண்புமிகு சய்டி அவர்கள் கேட்டுக் கொண்டார்.



## மாண்புமிகு நிக் நஸ்மி நிக் அமாட்

சிலாங்கூர் வாழ் இந்திய சமுதாயத்தின் ஒரு குடும்பத்தில் ஒரு பட்டதாரி உருவாகி தங்களின் வாழ்வாதாரத்தை உயாத்திக் கொண்டு வளமான வாழ்க்கையோடு இந்த ஆண்டு தீபாவளி திருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்று கல்வி பிரிவின் ஆட்சிககுழு உறுப்பினா மாண்புமிகு நிக நஸ்மி கேட்டுக் கொண்டார்.



## மாண்புமிகு டத்தோ டாக்டர் அமாட் யூனுஸ் ஹய்ரி

சமய உணர்வோடும் பெற்றோர்களை மதித்தும் அனைவருடன் இணைந்து சகோதரத்துவத்துடனும் இத்தீபாவளி பண்டிகையை சிறப்பான வழியில் குடும்பதோடு மகிழச்சியோடு கொண்டாட வேண்டும் என்று தனது தீபாவளி வாழத்துச் செய்தியில் மாண்புமிகு யுனோஸ் கேட்டுக் கொண்டார்.



## மாண்புமிகு இயன் யோங் ஹியன்

மாண்புமிகு இயன் யோங் ஹியன் வா தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் இந்திய சமுதாயம் தங்கள் இருப்பிடத்தின் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்துக் கொள்வதோடு இத்தீப திருநாளை நலமுடனும் வளமுடனும் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



## மாண்புமிகு டாக்டர் டரோயா அல்வி

சுகாதார, சமூகநல, பெண்கள் மேம்பாட்டு மற்றும் குடும்ப பிரிவின் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் டரோயா அல்வி அவர்கள் இந்து சமயத்தினருக்கு தனது தீபாவளி நல்வாழ்த்திகளை தெரிவித்துக் கொண்டார்.
மக்கள் இத்தீபத் திருநாளை ஆரோக்கியத்தோடும் மகிழ்வுடனும் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மக்கள ஆரோக்கியத்தோடு இருக்க நல்ல சத்தான உணவுகளை உண்ண வேண்டுமென்றும் இந்திய சமுதாயத்தைக் அன்போடுக் கேட்டுக் கொண்டார்.



## மாண்புமிகு எலிசபெத் வோங் கிட் பெங்

தீபாவளியை முன்னிட்டு சுற்றுலா செல்லும் அனைத்து இந்தயர்களும் பாதுகாப்போடு தங்களின் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த தீபத் திருநாளை குடும்பத்துடன் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டுமென்று மாண்புமிகு எலிசபெத் வோங் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## கிள்ளான் ஸ்ரீ அண்டாலாஸ் சட்டமன்ற உறுப்பினரும், கெஅடிலான் தேசிய உதவித் தலைவருமான டாக்டர் சேவியர் ஜெயக்குமார் அவர்களின் தீபாவளி வாழ்த்துச் செய்தி



**அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துகளை**

இவ்வாண்டு தீபாவளியைக் கொண்டாடும் பத்திரிக்கை ஆசிரியர்கள், நிருபர்கள் இதர பணியாளர்கள் மற்றும் எல்லா மலேசியர்களுக்கும், குறிப்பாக இந்துக்களுக்கு எனது குடும்பம், மக்கள் சேவை மையம், மற்றும் பக்காத்தான் ராயாட் சார்பிலும் எனது இனிய தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**தீபாவளி நாள் மட்டுமன்றி இந்தியர்களின் எதிர்காலத்தையே ஒளிரச் செய்யும் மாற்றத்தை அளிக்க வேண்டும்.**

தீபாவளி நாள் மட்டுமின்றி நம் எதிர்காலத்தையே ஒளிரச்செய்யும் மாற்றத்தை நம் குழந்தைகளுக்கு வழங்குவதே, அவர்களுக்கு நாம் வழங்கும் சிறந்த தீபாவளி பரிசாகும். இந்நாள் நமது அடுத்த தலைமுறை சிறப்புடன் வாழ, ஒரு மாற்றத்திற்கு வித்திடும் சக்தியை, நல்ல ஆசியை எல்லா இந்துக்களுக்கும் இறைவன் வழங்கட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துகள். இனிய தீபத் திருநாளைக் கொண்டாட, நாம் நமது வீடுகளைக் குடும்பத்தைத் தயார் படுத்தும் இவ்வேளையில், நமது அடுத்த தலைமுறை இந்நாட்டின் கௌரவமான பிரஜையாக வாழ, வழியமை திடவும் மறந்துவிடக் கூடாது. அதற்கு, நம்மை, நம் குடும்பத்தைத் தயார் படுத்தும் தலையாய கடமையும் நமக்கு உண்டு.

சுதந்திரத்துக்கு முன் நம்மிடையே நிலவிய செழிப்பு இன்று இல்லை! என்பதை இளம் சமுதாயம் அறியாமல் இருக்கலாம். ஆனால் கீழ்காணும் சில புள்ளிவிவரங்கள் அதை உணர்த்தும். சுதந்திரத்திற்கு முன் நாட்டின் மொத்த ஏழ்மை நிலை 49 விழுக்காடு, ஆனால் அதில் இந்தியர்களுக்கு 0.2 விழுக்காடு மட்டுமே சொந்தம்! ஆனால் இன்று, சுதந்திர மலேசியாவில் நாட்டின் ஏழ்மை 6.5 விழுக்காடு என்கிறது அரசாங்கம். ஆனால் ஆய்வுகள், இந்தியச் சமுதாயம் மட்டுமே ஏழ்மையின் பாழுங்குழியில் வீழ்ந்து கிடப்பதை காட்டுகிறது. நம்மிடமிருந்து உண்மை மறைக்கப்பட்டாலும், சில புள்ளி விவரங்களை ஆராய்ந்தால் அது தெளிவாகத் தெரியும்."

சுதந்திர மலேசியாவில் 60 ஆண்டுக் காலப் பாரிசான் ஆட்சியில் இந்தியர்களின் கல்வி பொருளாதாரச் சமூக மேம்பாடுகள் மகிழ்ச்சியை அளிக்கவில்லை ஒரு கட்டுக்கோப்பு மிக்க, பொருளாதார வல்லமை கொண்ட சமுதாயம், இன்று சீர்கெட்டுக் கிடக்கிறது. நாட்டின் புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் இந்தியச் சமுகம், கைவிடப்பட்ட குற்றவாளிகள் நிறைந்த நகைப்பிற்குரிய ஓட்டாண்டி இனமாக மாற்றப்பட்டு விட்டது என்பதை உறுதி படுத்துகிறது பிரதமர் நஜிப் இவ்வாண்டு ஏப்ரலில் வெளியிட்ட (ப்லுபிரிண்ட்) மலேசிய இந்தியப் பெருந்திட்டப் புள்ளிவிவரங்கள். இன்று எஞ்சி இருப்பது நமது தாய்மொழி கல்வி மட்டுமே. தமிழை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கம் இருந்தால், நமது பிள்ளைகள் கௌரவமான பிரஜைகளாக இந்நாட்டில் வாழ வேண்டும் என்ற ஆசை இருந்தால் நாட்டை மாற்றத்திற்கு இன்றே முன் முன்னெடுப்போம். அதற்கான சபதத்தை இத் தீபத்திருநாளில் மனதில் எடுப்போம். வாழ்க சமுதாயம், வளமுடன் வளரட்டும் நமது பிள்ளைகள், அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்.

**டாக்டர் சேவியர் ஜெயக்குமார்**
**கெஅடிலான் தேசிய உதவித் தலைவர் கிள்ளான் ஸ்ரீ அண்டாலாஸ் சட்டமன்ற உறுப்பினர்.**

# திறன்மிக்க பெண்ணியல் கல்லூரி தொழில்துறை புரட்சிக்கு வித்திடும்




ஷா ஆலாம் - திறன் மிக்க பெண்ணியல் கல்லூரி தொழில்துறை புரட்சிக்கு வித்திடும் என பெருமிதமாக கூறிய சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி தொழில்துறை வளர்ச்சி நான்காவது கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில் அதனை எதிர்கொள்ளும் ஆற்றலையும் திறனையும் பெண்கள் கொண்டிருக்க வேண்டும்.அத்தகைய ஆற்றல் மிக்க பெண்களை உருவாக்கும் அரணாக திறன் மிக்க பெண்ணியல் கல்லூரி (IWB) விளங்கிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இன்றைய நவீனத்துவ தொழில்துறை வளர்ச்சியில் தொழில்துறைகளை ரோபாட்டிக்ஸ் மற்றும் இணையம் வாயிலான சிந்தனைகளும் ஆட்கொண்டிருக்கும் நிலையில் அதுசார்ந்த துறைகளில் பெண்கள் வேலை இழக்கும் அபாயத்தை எட்டுகிறார்கள். காலத்திற்கு ஏற்ற திறன் மிக்க ஆற்றலையும் சிந்தனையும் அதே வேளையில் கற்றலையும் பெண்கள் ஆளுமை செலுத்த தவறினால் தொடர்ந்து அவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள் என்றும் மந்திரி பெசார் எச்சரித்தார்.

இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் தொடர்ந்து தொழில்துறையில் பெண்களின் ஆளுமையும் ஆற்றலும் தொடர திறன் மிக்க பெண்ணியல் கல்லூரி பெரும் பங்காற்றும் என்பதில் துளியும் ஐயமில்லை என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். அத்துறைகளில் பெண்களின் ஆற்றல் அதிகரித்தால் அவர்களின் பங்களிப்புத்துவம் பெருமிதம் கொள்ளும் நிலையை எட்டுவதோடு வேலை இழப்பிற்கும் வாய்ப்பு இல்லாமல் போகும் என்றார்.

பெண்களின் ஆற்றலை மேம்படுத்தவும் தொடர்ந்து விரிவாக்கப்படுத்தவும் சிலாங்கூர் மாநில அரசாங்கம் ஆக்கபூர்வமாக சிந்தித்து வருவதாகவும் அவர்களை தொழில்முனைவர்களாக உருவாக்கவும் அதேவேளையில் அவர்களுக்கு தொழில்முறை பயிற்சியினை வழங்கிடவும் களமிறங்கியுள்ளதாகவும் கூறினார்.

மேலும்,விளையாட்டு, கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மூலம் பெண்களின் திறனை மேம்படுத்துவதோடு திறன்மிக்க பெண்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தும் அதேவேளையில் சிலாங்கூர் மாநிலத்தில் தொழில்முனைவர்களையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும் உருவாக்கி பொருளாதார மேம்பாட்டிற்கு கருவூலமாக பெண்களை உருவாக்க வேண்டும் என்பதே இலக்கு என்றும் தெரிவித்தார்.

பெண்களை ஓரங்கட்டி விட்டு சிலாங்கூர் மாநிலம் விவேகமான மாநிலம் எனும் நிலையினை எட்ட முடியாது என்றும் நினைவுறுத்திய மந்திரி பெசார் பெண்களின் பங்களிப்புத்துவம் மிகவும் அவசியமானது என்றார். ஒரு ஆணின் கல்வி மேம்பாட்டிற்கும் ஒரு பெண்ணின் கல்வி மேம்பாட்டிற்கும் பெரும் வித்தியாசம் இருப்பதை சுட்டிக்காண்பித்த டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி ஒரு ஆணின் கல்வி ஒருவருக்கு மட்டுமே கற்பிக்கும் நிலைக்கு உகர்ந்த நிலையில் ஒரு பெண் கற்றால் அஃது ஒரு குடும்பத்தின் மேம்பாட்டின் சான்றும் என்றும் அவர் கூறினார்.

வருங்காலங்களில் சிலாங்கூர் மாநிலத்தின் வளர்ச்சியும் மேம்பாடும் பெண்களின் ஆற்றல் மிக்க சிந்தனையிலும் அவர்களின் திறன் மிக்க செயல்பாடுகளாலும் தான் அடங்கியுள்ளது என்றும் திறன் மிக்க பெண்ணியல் கல்லூரியின் தொடக்கவிழாவினை ஷா ஆலாம் பல்நோக்கு மண்டபத்தில் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் மந்திரி பெசார் இதனை நினைவுறுத்தினார்.

நடைபெற்ற நிகழ்வில் மந்திரி பெசார் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலியோடு மாநில சமூகநலன் மற்றும் மகளிர், குடும்ப மேம்பாடுதுறை ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் டரோயா ஹல்வி மற்றும் காஜாங் சட்டமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவருமான டத்தோஸ்ரீ டாக்டர் வான் அசிஸா வான் இஸ்மாயிலும் கலந்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், இந்நிகழ்விற்கு அதிகமான இந்திய பெண்கள் வருகை அளித்திருப்பது பெருமையாக இருப்பதாக கூறிய கிள்ளான் சுங்கை பெர்த்தே உத்தாராவை சார்ந்த கிராமத்து தலைவர் திருமதி. கண்மணி லெட்சுமணன் இந்திய பெண்கள் நாட்டின் மேம்பாடு மற்றும் வளர்ச்சியிலிருந்து விடுப்படாமல் இருக்க இஃது பெரும் உதவியாக இருப்பதாக கூறினார்.மேலும்,நடப்பு விவகாரங்களை அறிந்துக் கொள்வதோடு இன்றைய சூழலுக்கும் நாளைய நகர்வுகளுக்கும் ஏற்ற நிலையில் பெண்கள் தங்களை உருமாற்றம் செய்துக் கொள்ள இவை பெரிதும் அவசியமாகிறது என்றார்.

மேலும்,மக்களின் நலனுக்காக சிலாங்கூர் மாநில அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமூகநல திட்டங்களை மக்களிடையே கொண்டு சேர்க்கும் அரும்பணியினை செம்மையாகவும் அதேவேளையில் அத்திட்டத்திற்கு உயிர்க் கொடுக்கும் உன்னதத்தையும் தாம் சிறந்த முறையில் மேற்கொண்டு வருவதாகவும் கூறிய அவர் பெண்களுக்கான வாய்ப்புகள் இங்கு அதிகமாகவே இருப்பதாகவும் அதனை நன் முறையில் நம்மின பெண்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மாநில அரசாங்கத்தின் மக்கள் நலத் திட்டங்கள் மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணியினை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரின் கடமை என்றும் கூறிய கண்மணி அதனை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட்டால் இந்திய சமுதாயம் அத்திட்டங்களின் மூலம் நன்மை அடைவதை நாம் உறுதி செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.


அவ்வகையில், மாநில அரசாங்கத்தின் ஒவ்வொரு சமூகநலத் திட்டங்களும் மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணியினை ஆக்கப்பூர்வமாக தாம் மேற்கொண்டு வருவதாகவும் கூறிய அவர் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட சுகாதார அட்டை (பெடுலி சிஹாட்) திட்டத்தில் நம்மவர்களை அதிகமாய் பதிந்தும் வருவதாக கூறினார். மருத்துவத்திற்கான செலவினங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் மாநில அரசாங்கத்தின் இத்திட்டம் காலத்திற்கு ஏற்ற சிந்தனை என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் திட்டங்களையும் இந்திய சமுதாயத்திடம் கொண்டு செல்லும் ஆக்கப்பூர்வ பங்களிப்பினை பெண்களால்தான் வழங்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்த கண்மணி பெண்கள் வீட்டை மட்டும் கவனித்தால் போதாது மாறாய், நாட்டையும் பார்க்க வேண்டும்.

அதே வேளையில் பெண்களின் முன்னேற்றத்திற்கும் சிலாங்கூர் மாநில பொருளாதார மேம்பாட்டிற்கும் பெண்களின் பங்களிப்பும் திறன் மிக்க ஆற்றலும் மிகவும் அவசியம் என்றும் கண்மணி நினைவுறுத்தினார். காலத்திற்கு ஏற்ற சிந்தனையை மாற்றமும் திறன் மிக்க ஆற்றலும் பெண்களிடமும் வலுபெற வேண்டும் என்றும் உயரிய சிந்தனையில் சிலாங்கூர் மாநில அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் இத்திட்டத்தினை இந்திய பெண்கள் நன்முறையில் பயன்படுத்தி உலக வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கு ஈடான இலக்கினை எட்ட வேண்டும் என்றும் அவர் இந்நிகழ்விற்கு பின்னர் அது குறித்து கருத்துரைக்கையில் இவ்வாறு கூறினார்.

பெண்களின் மேபாடும் வளர்ச்சியும் சிலாங்கூர் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டின் கருவூலமாக அமையும் என்பதில் துளியும் ஐயமில்லை எனும் சிலாங்கூர் மந்திரி பெசாரின் சிந்தனையை சிலாங்கூர் மாநில வாழ் இந்திய பெண்கள் உணர்ந்து அச்சிந்தனையோடு கைகோர்த்து பயணிக்க வேண்டும் என்பதே விவேகமான செயல்பாடாக இருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.







Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI

**சிலாங்கூர் மாநிலத்தின் 12 ஊராட்சி மன்றங்களை சேர்ந்த 50 இந்திய மாவட்ட, நகராண்மை மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் மனங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள். 2008-க்கு பிறகு இந்திய சமுதாயம் வழங்கிய வெற்றியை தொடர்ந்து பல இந்திய தலைவர்களுக்கு ஊராட்சி மன்ற உறுப்பினர்களாக வாய்ப்பு கிடைத்தது. இந்த பயணத்தில் எங்களின் சிறந்த சேவையை வழங்கி வந்துள்ளோம். மேலும் தொடரும் எங்கள் பணி என்று இந்திய சமுதாயத்திற்கு உறுதி அளிக்கிறோம்.**




## சிலாங்கூர் மாநிலத்தில் ஜப்பானிய சுற்றுலா பயணிகள்அதிகரிப்பு

சிலாங்கூர் மாநிலத்தில் ஜப்பானியர் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை 211.38 சதவிதம் அதிகரிதுத்துள்ளது. இதே காலக்கட்டத்தில் சென்ற ஆண்டை ஒப்பிடுகையில்,இவ்வாண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான கணக்கெடுப்பில், 40,000 ஜப்பானிய சுற்றுப்பயணிகள் கூடுதலாக சிலாங்கூர் மாநிலத்திற்கு வருகைப்புரிந்துள்ளதை சுற்றுலாத்துறை கணக்கெடுப்பு காட்டுகிறது.

சிலாங்கூர் சுற்றுலாத் துறை மேலாளர், நூருல் அஷிகின் முகமதுதின் கூறுகையில், ஜப்பானியர் சுற்றுப்பயணைகளைக் கவருவதற்காக அந்நாட்டு சுற்றுலா முகவர்களிடம் மாநில சுற்றுலாத் துறை ஏற்படுத்திக் கொண்ட ஒத்துழைப்பே ஜப்பானியர் சுற்றுப்பயணிகளின் அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது என்றார்.இவ்வாண்டு, சிலாங்கூர் மாவட்ட மன்றமும், சிலாங்கூர் சுற்றுலாத் துறையும் ஹகுபா சுற்றுலா அமைப்புடன் இணைந்து செயல்பட வாயுப்புக்களை உருவாக்கிக் கொள்ளும் என்று நூருல் தெரிவித்தார். இந்த ஒத்துழைப்பு, கோலா சிலாங்கூர் மாவட்டத்தையும் , ஜப்பான் ஹகுபா கோர்யு சுற்றுலாத் தலங்களை ஊக்குவைப்பதற்காகவும்ஆகும்.






### அனைவருக்கும் என் இனியத் தீபாவளி நல் வாழ்த்துகள்

இந்நாளில் இறைவனின் அருளால் எல்லாம் வளமும் பெற்று சிறப்புடன் வாழ வேண்டுகிறேன். பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அரக்கனை அழித்து மக்களைத் துன்பத்தில் இருந்து காப்பாற்றினார். அதே போல் தீப ஒளியை உள்ளத்தில் ஏற்றி தீய எண்ணங்களை அகற்றி நல்ல எண்ணங்களை உள்ளத்தில் விதைத்து நலமுடன் வாழ வாழ்த்துகிறேன். தீபாவளி பெருநாள் எல்லாம் வளமும் வழங்கும் அன்னை மாக லட்சுமி நம் இல்லத்திற்கு வரும் திருநாளாகும் . அதனால் நாம் தீபாவளி அன்று இறைச் சிந்தனையுடன் இருந்து மனமகழ்ச்சியுடன் அன்னையை இல்லத்திற்கு அழைப்போம்

## பள்ளிகளை அரசியல் தளமாக ஆக்காதீர் - சுஹாய்மி ஷாபியி



நாடு சுதந்திரம்பெற அம்னோ முதுகெழும்பாக திகழ்ந்ததால் பள்ளி மாணவர்கள் அம்னோ கொடியை ஏந்திச்செல்ல அனுமதிக்கப்பட்டதாக கல்வி மந்திரி சொல்கிறார் அப்படியானால்நாட்பது வருடங்களாக சிறந்த எதிர்க்கட்சியாக விளங்கிவரும் ஜசெகவின் கொடியை சீன பள்ளி மாணவர் ஏந்திச்செல்ல அரசாங்கம் அனுமதி வழங்குமா?

மந்திரிகள் பேசும்போது மிக கவனமாகபேச வேண்டும். பள்ளிப்பிள்ளைகள் தேசியக்கொடியைத்தவிர வேறு அரசியல் கட்சிகளின் கொடியை ஏந்துவது சட்டவிரோதமாகும் பள்ளிப்பிள்ளைகளின் மனதில் தேசியப்பற்றை விதைக்க வேண்டுமே தவிர அரசியல் கட்சிகள் தங்கள் சுயலாபத்திற்காக பள்ளிப்பிள்ளைகளை பயன்படுத்தக்கூடாது.

# சிலாங்கூர் மாநில இந்திய சமூகத் தலைவர்கள்

**சிந்தனை மாற்றங்கள் நம் இனத்தின் நம்பிக்கையான எதிர்காலத்திற்கு வித்திட,**
**தீபங்கள் ஒளியூட்டி இருள் நீங்கி இன்பங்கள் சூழ்ந்திட சிலாங்கூர் வாழ்**
**அனைத்து இந்தியர்களுக்கும் எங்களின் இனிய தீபாவளி வாழ்த்துகள்**

Rajenthiran
Teratai
0162290009

Ramashandran
Kota Damansara
0163620157

Raman
Kota Alam Shah
0166053410

Kumaravel
Kota Anggerik
0123583126

Kanmani
Selat Kelang
0122864841

K.Balachandran
Hulu Bernam
0123651439

Seeriyanathan
Batu.Tiga
01666846207

Illangu
Taman Medan
0187741018

Ragunathan
Batu Caves
0122122977

Saravanan
Batu Tiga
0102293375

Balasundar
Ijok
0197710676

Sager Vilu
Sekinchan
0163688474

Thamilarusu
Kinrara
0126754484

Pathmanathan
Permatang
01110768099

Ramachandran
Meru
0162585294

Chinniah
Ulu Bernam
016365925

Saminadhan
Seri Setia
0162770920

Ferences Xavear
Kuala Kubu Baru
0102424352

Soosay
Lembah Jaya
0103649581

Radhakrishnan
Selat Kelang
0182202303

Srinivasan
Kajang
0192858443

Sivakumar
Sg.Pelek
0126975547

Anbalagan
Teluk Datuk
0122466915

Rayasegaran
Pelabuhan Klang
0126998684

Krishnaveni
Bukit Melawati
0126142735

Sandramohan
Paya Jaras
01766199515

Achannan
Rawang
0102424189

Francis
Sri Serdang
0126267455

Krishnan
Pelabuhan Klang
0126026710

Kumar
Sri Serdang
0162712241

Siva Krishnan
Kinrara
0123232464

Paramasivam
Sg.Air Tawar
0124685349

Veeran
Seri Andalas
0122579137

Nardarajan
Seri Muda
0163081398

Sundram
Kota Alam Shah
0122337411

ChristieLouis
Balakong
0123456040

Loganathan
Bukit Lanjan
0162110365

Rajan Kanan
Batang Kali
0122142006

Puvenendran
Semenyih
0167648556

Manivannan
Pandamaran
0166318700

Muniandy
Teluk Datuk
0123970492

Narender Kumar
Sementa
0126135587

Raman
Sg.Pelek
0126571067

Anmuniandy
Kuang
016-2424189

Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI

# சிலாங்கூர் மாநில தொழில் முனைவர் தன்னாளுமை திட்டத்தை இந்தியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

பூச்சோங் - இந்தியர்களை தொழில் முனைவர்களாகவும் வர்த்தக ரீதியில் அவர்களின் வாழ்வாதாரத்தை சிறந்த இலக்கிற்கும் கொண்டு செல்ல டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி தலைமையிலான மாநில அரசாங்கம் உருவாக்கியிருக்கும் தொழில் முனைவர் தன்னாளுமை திட்டத்தில் இந்தியர்கள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என கின்றாரா நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சார்ல்ஸ் சந்தியாகோ கேட்டுக் கொண்டார்.

மாநில பட்ஜெட்டின் போது 2017ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் இந்திய



தொழில்முனைவர்களை உருவாக்கமும்

பொருளாதார ரீதியில் இந்திய சமுதாயத்தை மேம்படுத்தவும் மாநில அரசாங்கம் 1 மில்லியன் ரிங்கிட்டை ஒதுக்கீடு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒதுக்கீடு பிரத்தியேகமாக இந்திய சமுதாயத்திற்கானது. இதனை சிலாங்கூர் வாழ் இந்தியர்கள் நன் முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

மாநில அரசாங்கத்தின் நோக்கம் அதன் இலக்கை எட்டும் வகையில் பூச்சோங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட பூமாலை கட்டும் பயிற்சியினை நிறைவு செய்து வைத்த மாண்புமிகு சார்ல்ஸ் சந்தியாகோ இந்தியர்கள் தங்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு சிறுத்தொழில் செயல்பாடுகள் பெரும் பங்காற்றும் என்றும் அவர் கூறினார்.

பூமாலை கட்டும் பயிற்சியினை முடித்தவர்கள், அதனை தங்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக வியபார ரீதியில் முன்னெடுக்கும் போது சிலாங்கூர் மாநில அரசாங்கம் உருவாக்கியிருக்கும் இந்த 1 மில்லியன் தொழில் முனைவர் தன்னாளுமை திட்டம் கைகொடுக்கும் என்றும் கூறினார்.

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள இந்தியர்களின் வறுமையை ஒழிக்கவும், தனித்து வாழும் அன்னையர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திடவும் மட்டுமின்றி இந்திய சமுதாயத்தை பொருளாதார ரீதியில் அடுத்தக்கட்ட முன்நகர்விற்கு கொண்டு செல்ல வேண்டும் எனும் உயரிய சிந்தனையோடு மாநில அரசாங்கம் இத்திட்டத்தை வரையறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தகது.

பெரும் தொழில் முனைவர்களாக உயிர்ப்பிக்கும் முன்னர் நாம் சிறு-சிறுத்தொழில்கள் மூலம் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கு வித்திடும் வகையில் மாநில அரசாங்கத்தின் இத்திட்டத்தின் கீழ் சிறு - சிறு பயிற்சிகளை வழங்கி அதன் மூலம் தொழில் முனைவர்களை உருவாக்கும் நிலையை விவேகமாக முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய சமுதாயம் கைத்தொழிலில் ஆளுமைக் கொண்டிருந்தாலும் அவர்கள் அத்தொழிலில் மேம்பாடு காணவும் அதனை விரிவாக்கம் செய்தும் பொருளாதார ரீதியில் முன்னெடுக்க போதிய பொருளாதார முதலீடு இல்லாமல் தத்தளிக்கிறார்கள். அதனை ஈடுக்கட்டவே சிலாங்கூர் மாநில அரசாங்கம் இத்திட்டத்தை நன்கு ஆராய்ந்து முன்னெடுத்துள்ளது என்பது பெருமிதமானது.

பூச்சோங்கில் பூமாலை கட்டும் பயிற்சியினை மேற்கொண்டுள்ள நிலையில் கின்றாரில் புகைப்பட பயிற்சியும் வடிமைப்பு பயிற்சியும் வழங்கப்பட்டு வரும் நிலையில் காப்பாரில் விரைவில் முகஒப்பனை பயிற்சியும் வழங்கிய திட்டம் வகுக்கப்பட்டு வருவதாகவும் சார்ல்ஸ் சந்தியாகோ தெரிவித்தார். இந்திய சமுதாயத்தின் பொருளாதார மேம்பாட்டிற்காக சிலாங்கூர் மாநில அரசாங்கம் உருவாக்கியிருக்கும் இத்திட்டத்தில் இந்தியர்கள் தங்களின் ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும். வாய்ப்பு நம் கண் முன் இருக்கிறது. அதனை பயன்படுத்த நாம் முயல வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இத்திட்டத்தின் கீழ் இந்தியர்கள் ஆளுமைக் கொண்டால் சிலாங்கூரில் பொருளாதார ரீதியில் இந்தியர்கள் தங்களின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதோடு நம்மிடையே தொழில்முனைவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க செய்யும் என்றார். இந்திய சமுதாயத்தின் மேம்பாட்டில் அக்கறைக் கொண்டு இத்திட்டத்தை உருவாக்கியதோடு அதற்காக பட்ஜெட்டையும் ஒதுக்கீடு செய்த மந்திரி பெசாருக்கு இந்திய சமுதாயம் நன்றி கூறதான் வேண்டும் என்றார். பூச்சோங்கில் நடைபெற்ற பூமாலை கட்டும் பயிற்சியினை முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சார்ல்ஸ் சந்தியாகோவுடன் கின்றாரா சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஏங் ஷி ஹான் அவர்களும் உடன் இருந்தார்.

## சிலாங்கூர் இந்தியர் தொழில் முனைவர் தன்னாளுமை திட்டம்

சிலாங்கூர் இந்தியர்களின் பொருளாதார நிலையை உயர்த்த சிலாங்கூர் மந்திரி பெசார் மாண்புமிகு அஸ்மின் அலி சிலாங்கூர் தொழில் முனைவர் தன்னாளுமை திட்டத்தின் கீழ் ரிம ஒரு மில்லியன் வழங்கியுள்ளார். இதன் முக்கிய நோக்கம் B40 ரக மலேசிய இந்தியர்களை திறன் ரீதியிலான இலவச பயிர்சிகளை வழங்கி சிரு வியாபரம் தொடங்க "ஹிஜ்ராஹ் சிலாங்கூர்" கடனுதவி வழங்கும் ஒரு முயற்சியாகும். இதன் வழி, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெரும் இந்தியர்கள், தனித்து வாழும் தாய்மார்கள், இளைஞர்கள் என அனைவரும் சிரு வியாபாரம் செய்து பொருளாதாரத்தை உயர்த்தி கொள்ள ஒரு அரிய வாய்ப்பாக அமையும். இதன் முதல் கட்ட திட்டம் கடந்த செப்டம்பர் 2017 வெற்றிகரமாக தொடங்கப் பட்டது.


இந்த பயிற்சிகளின் வழி, பங்கேற்பாளர்களை வியாபாரம் தொடங்க ஊக்குவிக்க முடியும். அதுமட்டுமின்றி சுயகாலில் நின்று வியாப்பாரத்தை நடத்த வேண்டிய தொடர் பயிற்சிகள் மற்றும் கற்பித்தல்களும் ஏற்பாடு செய்யப்படும். கை தேர்ந்த பூ கட்டுதல்/பின்னுதல், புகைப்படம் எடுத்தல், அணிச்சல்/ கேக், ரொட்டி/பிஸ்கட் செய்யுதல், கிராபிக் டிசாய்ன், பாராம்பரிய பலகாரங்கள், தையல், இமிடேசன் நகைகள் செய்தல் போன்ற பயிற்சிகள் பண்டாமாரான், பெலாபுவான் கெலாங், கின்றாரா, ஸ்ரீ முடா, ஸ்ரீ அண்டாலாஸ், செமந்தெ போன்ற தொகுதிகளின் முதல் கட்ட திட்டமாக ஆரம்பிக்கப் பட்டள்ளன. இதில் இதுவரை மொத்தம் 240 இந்தியர்கள் பங்குபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தின் முன்முதல் நோக்கம் இந்தியர்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களின் பொருதார நிலையை வலுப்படுத்தவே ஆகும். வழங்கப் படும் திறன் சார்ந்த இலவச பயிற்சிகளின் கலந்துக் கொண்டு வியாபாரம் தொடங்க ஆர்வம் உள்ள பங்கேற்பாளர்களுக்கு வியாபரம் செய்ய சிலாங்கூர் கடனுதவி வழங்கவும் தயாராக உள்ளது. முதல் கட்ட கடனுதவி அடுத்த கட்ட கடனுதவி, வியாபாரம் பெருக்க கடனுதவி என பல்வேறு சலுகைகள் இந்த ஹிஜ்ராஹ் சிலாங்கூர் எனும் கடனுதவி திட்டத்தின் வாயிலாக பெற வாய்புகள் ஏற்படுத்த பட்டுள்ளன.

இந்த தொழில் முனைவர் தன்னாளுமை திட்டத்தின் வாயிலாக, சிலாங்கூர் அரசு மலேசிய இந்தியர்கள் குறிப்பாக B40 ரக இந்தியர்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்த அக்கறை கொண்டு ள்ளதை தெளிவாகக் காட்டுகின்றது.

இரண்டாம் கட்ட திட்டம் நவம்பர் மாதத்தில் தையல் கலை, கைப்பை, கேக் மற்றும் பாரம்பரிய பதார்த்தங்களுடன் தொடங்கவுள்ளது.













Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI



இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# மாநில அரசாங்கத்தின் "விவேகமான மாநிலம் 2025" இலக்கை காஜாங் நகராண்மைக் கழகம் மெய்பிக்கிறது




காஜாங் – சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் "விவேகமான மாநிலம் 2025" எனும் தூரநோக்கு இலக்கினை காஜாங் நகராண்மைக் கழகம் தொடர்ந்து மெய்பித்து வருகிறது. அந்நிலையில் காஜாங் நகராண்மைக் கழகம் தொடர்ந்து பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களையும் மக்களுக்கான ஆக்கப்பூர்வ செயல்திட்டங்களையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

தொடக்கத்தில் சிறு நகரமாய் இருந்த காஜாங் பகுதி பின்னர் பல்வேறு மேம்பாடுகளாலும் ஆற்றல் மிக்க செயல் திட்டங்களாலும் புதியதொரு தலம் நோக்கி பயணிக்க தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. 1997இல் காஜாங் நகரம் காஜாங் நகராண்மைக் கழகமாக அங்கீகரிக்கப்பட்டது முதல் 2017ஆம் ஆண்டில் அஃது சுமார் 25வது ஆண்டில் கால் பதிக்கும் இன்றைய சூழலில் பல்வேறு மாற்றங்கள், வளர்ச்சிகள் மற்றும் மேம்பாடுகளை துள்ளியமாய் எட்டியுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் இன்றைய டத்தோஸ்ரீ அஸ்மின் அலியின் தலைமையிலான சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் கீழ் காஜாங் நகராண்மைக் கழகம் துரித வளர்ச்சியின் உச்சத்தை எட்டியிருப்பதை மறுத்திட முடியாது.மக்கள் விரும்பி வாழு நகரமாகவும் வெளிநாட்டினரின் கவனத்தை ஈர்த்த நகரமாகவும் காஜாங் நகர் விளங்கிடும் அதேவேளையில் நகர்வாசிகள் விரும்பி வசிக்கும் நகராகவும் காஜாங் திகழ்கிறது என்பதை காஜாங் நகராண்மைக் கழகத்தின் தலைவர் முகமட் சாயுதி பக்கர் பெருமிதமாய் கூறினார்.

அதேவேளையில், நாட்டின் தலைநகரான கோலாலம்பூர் பெரும் நகரின் எல்லையோடு ஒட்டியிருக்கும் காஜாங் அனைத்து நிலையிலும் சரியான ஒரு தலமாக அமைந்திருப்பதோடு அஃது வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, வர்த்தக வாய்ப்பு என ஒவ்வொரு நிலையிலும் தனித்துவ சிறப்பினையும் சூழலையும் துள்ளியமாய் கொண்டிருப்பது காஜாங் நகரத்தின் சிறப்பிற்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது.

காஜாங் நகரம் மக்கள் புலக்கம் அதிகம் கொண்ட நகரமாக் விளங்கிடும் அதேவேளையில் அஃது தொடர்ந்து பல்வேறு மேம்பாடுகளை மேற்கொள்வதோடு காஜாங் நகரம் மக்கள் விரும்பி வசிக்கும் நகரமாய் உருமாற்றம் செய்வதற்கு ஏதுவாக பல்வேறு வசதிகளையும் மேம்பாடுகளையும் உருவாக்குவதில் தீவிர முனைப்பு காட்டி வருவதாகவும் முகமட் சாயுதி பக்கர் குறிப்பிட்டார். மேலும், தனியார் நிறுவனங்கள் விடமைப்பு உட்பட மேம்பாட்டு திட்டங்களை கொண்டு வரவும் காஜாங் நகராண்மைக் கழகம் வாய்ப்பு அளிப்பதாகவும் பொது போக்குவரத்து சேவைகளையும் தொடர்ந்து மேம்படுத்தி வருவதாகவும் கூறினார்.

## மேம்பாட்டு நகரம்

காஜாங் நகரம் தொடர்ந்து துரித வளர்ச்சியும் மேம்பாடும் கொண்ட நகரமாய் திகழ்ந்து வருகிறது. அதன் மேம்பாடுகள் சிலாங்கூர் மாநிலத்தின் பிற ஊராட்சிதுறைகளோடு ஒப்பிடுகையில் தனித்துவமாய் விளங்குகிறது. காஜாங் நகரம் பெரும் நகரமாய் உருவெடுத்து வரும் அதேகாலக்கட்டத்தில் அதனை சுற்றிலும் சிறு சிறு நகரங்கள் தொடர்ந்து மேம்பாடு கண்டும் வருகிறது. வணிகத்தலங்களும் விடமைப்பு பகுதிகளும் நாளுக்கு நாள் பெரும் முன்னேற்றத்தை நோக்கி நகர்ந்துக் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.



## முன்மாதிரியான ஊராட்சித்துறை

நகராண்மைக் கழகமாக உருவெடுத்து 20ஆம் ஆண்டை எட்டியிருக்கும் காஜாங் நகராண்மைக் கழகம் சிலாங்கூர் மாநிலத்தின் இதர ஊராட்சிதுறைகளுக்கு முன் மாதிரியாக திகழ்வதாக சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி பெருமிதமாய் குறிப்பிட்டார். காஜாங் நகராண்மைக் கொண்டிருக்கும் தொடர் மேம்பாட்டு நடவடிக்கைகளை இதர ஊராட்சிதுறைகளும் பின் பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். காஜாங் நகராண்மைக் கழகம் இந்நகரை பயனமிக்கதாகவும் சிறந்த பங்களிப்புத்துவத்தை கொண்ட நகரமாகவும் உருமாற்றி வரும் நிலையில் ஆற்றல் மிக்க நகரமாகவும் காஜாங் திகழ்வதாக தெரிவித்தார்.

## பொது மண்டபம்

காஜாங் மற்றும் அதன் சுற்றுவட்டார மக்களின் நன்மைக்காகவும் அவர்களின் அனைத்து நிலையிலான நடவடிக்கைகளுக்காகவும் காஜாங் நகராண்மைக் கழகம் ஆங்காங்கே பல்வேறு பொது மண்டபங்களை அமைத்திருப்பதோடும் தொடர்ந்து அமைத்தும் வருகிறது. இம்மாதிரியான பல்நோக்கு மண்டபங்கள் சகல வசதிகளையும் கொண்டிருப்பதையும் உறுதி செய்யப்படுவதாகவும் அறியப்படுகிறது.

## ஸ்மார்ட் சிலாங்கூர் பேருந்து

பொது போக்குவரத்தில் தனித்துவ கவனம் செலுத்தி வரும் காஜாங் நகராண்மைக் கழகம் இந்நகரில் பல்வேறு பொது போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தியிருந்தாலும் மாநில அரசாங்கத்தின் விவேகமான திட்டமான ஸ்மார்ட் சிலாங்கூர் பேருந்து சேவை மக்களின் தனித்துவ ஆதரவை பெற்றிருப்பதோடு காஜாங் வாழ் மக்களின் அன்றாட தேவைகளில் இன்றியமையாத ஒன்றாக அஃது விளங்குகிறது.மேலும், இதன் மூலம் சாமானிய மக்களின் சமூகநலன் காக்கப்படுவதோடு அவர்களின் பொருளாதார நிலைக்கு பெரும் உதவியாக விளங்க முடிகிறது. ஸ்மார்ட் சிலாங்கூர் பேருந்து சேவை சமூகநலன் திட்டத்தின் ஒரு பகுதியாக காஜாங் நகரை பெருமைப்படுத்துகிறது. வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு பெரும் நகரை நோக்கி துரித மேம்பாட்டினை நோக்கி பயணிக்கும் காஜாங் நகரம் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளத்தை தடுக்கவும் அப்பிரச்னைக்கு நிரந்திர தீர்வுகாணவும் காஜாங் நகராண்மைக் கழகம் ஆக்கப்பூர்வமான தூரநோக்கு செயல்பாட்டினை மேற்கொண்டிருப்பது வெள்ளப் பிரச்னைக்கு தீர்வாக அமைக்கிறது.

## வெள்ளப் பிரச்னைக்கான

காரணியத்தை காஜாங் நகராண்மைக் கழகம் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் கண்டறிந்துள்ள நிலையில் அதனை முறைப்படுத்தி தொடரும் இப்பிரச்னைக்கு தீர்வினை ஏற்படுத்துவதில் அஃது வெற்றியும் கண்டுள்ளது. தொடர்ந்து மக்கள் காஜாங் நகராண்மைக் கழகத்தை வெள்ளம் ஏற்படும் போது குறை சொல்வதை தடுக்கவும் மக்களுக்கு நல் சூழல் கொண்ட நகரை உருவாக்கிக் கொடுக்கவும் பல்வேறு நடவடிக்கையினை காஜாங் நகராண்மைக் கழகம் துள்ளியமாய் மேற்கொண்டு வருகிறது. இனி வருங்காலங்களில் காஜாங் நகரம் வெள்ளப் பிரச்னை இல்லா நகரமாய் உருவெடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

காஜாங் நகராண்மைக் கழகம் அதன் 20ஆம் ஆண்டு நிறைவினை எட்டியுள்ள நிலையில் அஃது தொடக்கம் முதல் சந்தித்து வந்த சவால்களும் போராட்டங்களும் எழுத்தில் அவ்வளவு எளிதில் பதிவு செய்து விட முடியாது. காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை மக்களின் நல் வாழ்விற்காக பெரும் திட்டங்கள் வாயிலாக அதனை உருவாக்கிக் கொடுத்திருக்கும் காஜாங் நகராண்மைக் கழகம் சிலாங்கூர் மாநிலத்தில் தனித்துவமான ஊராட்சித்துறை என்பதில் துளியும் ஐயமில்லை.

காஜாங் வாழ் மக்களின் நலனின் அக்கறைக் கொண்டு திறன் மிக்க நடவடிக்கைகளை மக்களின் மேம்பாட்டு வளர்ச்சிக்காகவும் வசதிகளுக்காகவும் உருவாக்கிக் கொடுத்து இன்றைய நவீனத்துவ சூழலில் புதிய தலம் நோக்கி வெற்றிகரமான இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் காஜாங் நகராண்மைக் கழகத்திற்கு காஜாங் வாழ் மக்களின் ஆதரவும் அவர்களின் ஒவ்வொரு முன் நகர்வுக்கும் பெரும் ஒத்துழைப்பும் இருத்தல் காலத்தின் கட்டாயமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



Informasi Terkini di jari anda
MUAT TURUN PERCUMA APLIKASI

# கோத்தா அங்கிரிக் சட்ட மன்றத்தின் முறுக்கு சுடும் நிகழ்வு



ஷா அலாம் இந்தியர் சமூக மேம்பாட்டு சங்கத்தின் ஏற்பாட்டில் கோத்தா அங்கெரிக் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு 'யாகோப் சபாரி' மற்றும் கிள்ளான் நகராண்மைக் கழக உறுப்பினர் திருமதி 'சிவகாமி' ஆதரவோடு தீபாவளி முறுக்கு சுடும் நிகழ்வு கடந்த 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்டு மிக சிறப்பாக நடந்தேறியது. இந்நிகழ்வில் ஆண்டுதோறும் தீபாவளி பொருட்கள் வாங்கும் பற்று சீட்டு பெறும் நானூறு பேருக்கும் இந்த முறுக்கு மாண்புமிகு யகோப் சபாரி அவர்களால் வழங்கப்படுகின்றது.

இவ்வேளையில் இந்த நிகழ்வினை ஆண்டு தோறும் எங்களை ஏற்பாடு செய்யக்கோரி இந்தியர்களுக்கென்று மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ளும் மாண்புமிகு யகோப் சபாரி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றி கலந்த வாழ்த்துக்கள். இந்நிகழ்வின் மூலம் ஷா அலாம் வட்டாரத்தைச் சேர்ந்த பத்து இந்திய பெண்கள் பயன் அடைந்துள்ளனர். இதன் வழி கிடைக்கப்பெற்ற லாபம் அவர்களின் தீபாவளி செலவினங்களுக்கு வழங்கப்பட்டது. தீபாவளி பெருநாள் காலங்களில் ஏற்படும் செலவினங்களை சமாளிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பு.

இதன் முழு செலவினங்களை ஏற்றுக்கொண்டதோடு மட்டுமின்றி அந்த முறுக்குகளை வாங்கி அதை மக்களுக்கே பரிசளிக்கும் மாண்புமிகு யாகோப் சபாரி அவர்களின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. இந்த வாய்ப்பினை சரியாக பயன்படுத்திக் கொண்ட அனைவருக்கும் பாராட்டுக்கள். நன்றி.

# எம்பிஎஸ்ஏ நான்கு பேருந்து மற்றும் ஒரு லாரியை பறிமுதல் செய்தது



ஷா ஆலம் மாநகராட்சி மன்றம் (எம்பிஎஸ்ஏ) செக்சன் 7, செக்சன் 24 மற்றும் தாமான் ஸ்ரீ மூடா ஆகிய பகுதிகளில் நான்கு பேருந்துகளை பறிமுதல் செய்தது. மேலும் தாமான் ஸ்ரீ மூடாவில் ஒரு லாரியை கனரக வாகனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் பறிமுதல் செய்யப்பட்டது என்று தொழில்முறை பொதுத் தொடர்பு பிரிவு தலைவர் ஷாரின் அமாட் கூறினார். பொது இடங்களில் நிறுத்தப்படும் கனரக வாகனங்கள் மீது எடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கையில் மேற்கண்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்றார்.

" கனரக வாகனங்களை நிறுத்தியதால் கார் நிறுத்துமிடங்கள் விடமைப்பு பகுதியில் பற்றாக்குறை ஏற்படுகிறது குறிப்பாக அடுக்குமாடி குடியிருப்பில் பெரும்பாலும் நடக்கிறது. இது மட்டுமில்லாமல் பசுமை இடங்களையும் கனரக வாகனங்கள் நிறுத்தியதால் பாதிக்கப்படுகிறது மேலும் வாகனங்கள் போக்குவரத்தும் ஸ்தம்பித்துப் போய்விடும் அளவிற்கு சில இடங்களில் ஏற்படுகிறது," என்று சிலாங்கூர் இன்றுக்கு கூறினார். இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கையில் ஷா ஆலம் மாநகராட்சி மன்றத்தின் அமலாக்க பிரிவு ,சட்டத்துறை பிரிவு ,தொழில்முறை பொதுத் தொடர்பு பிரிவு ,தரைப் போக்குவரத்து சேவை ஆணையம் ,மலேசிய அரச காவல்துறை மற்றும் சாலை போக்குவரத்து இலாகா ஆகியவை பங்கேற்றனர் என்று ஷாரின் கூறினார்.

அப்புறப்படுத்தப்படாத கனரக வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்ட கட்டணமாக ரிம 300 விதிக்கப்படும் என்றார். இந்த கட்டணம் ரிம 2000 கூட உயரலாம். மேலும் நாள் ஒன்றுக்கு ரிம 50 சேவை கட்டணமாக விதிக்கப்படலாம் என்று விவரித்தார்.

# கெஅடிலான் இளைஞர் தலைவர்: 'ஒரே மலேசியா கடை' பெருந்திட்டத்தின் தோல்விக்கு நஜிப் பொறுப்பேற்க வேண்டும்

ஒரே மலேசியா மக்கள் கடை பிணையம் தோல்விக்கு நஜிப் பொறுப்பேற்க வேண்டும் என்று கெஅடிலான் இளைஞர் படைத்தலைவர் நிக் நஸ்மி வலியுறுத்தினார்.

நஜிப் நிர்வாகம் மீண்டும் KR1M திட்டத்தையும் மற்ற 1 மலேசியா திட்டங்களையும் திட்டமிட்டுவதில் தோல்வியைக் கண்டுள்ளதாகவும் மக்கள் மத்தியில் இது எதிர்மறை தாக்கத்தை உண்டாக்கியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வாழ்வாதார செலவுகள் அதிகரிப்பு , பொருட்கள் மற்றும் சேவை வரி திணிப்பு ,குறைந்த சம்பளமும் கூலியும் போன்ற முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் .இந்த தோல்விகளை எல்லாம் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயம் நெருங்கிவிட்டது என்று அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

முன்னதாக ,உள்நாட்டு வர்த்தக , கூட்டுறவு மற்றும் பயனீட்டாளர அமைச்சு) (KPDNKK) வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் அதிக விருப்பங்களை வழங்குவதற்கு மட்டுமே தற்காலிகமாக KR1M பிணையம் மூடப்படுகிறது என்று கூறிவருகிறது.

ஆயிரக்கணக்கான KR1M ஊழியர்களின் தலைவிதி இப்போது இந்தத் திட்டத்தின் ஒப்பந்தக்காரர் மைடின் முகமட் ஹோல்டிங்ஸ் (Mydin). கையில் உள்ள என்றார் அவர். இருப்பினும் அரசாங்கத்தின் இத்திட்டத்தினால் பெரும் இழப்புக்களை சந்தித்ததாக மைடின் தரப்பு குற்றம் சாட்டுவதாக நஸ்மி தெரிவித்தார்.

அரசாங்கத் தரப்பில் மைதீனை குறை கூறுவதும் மைதீன் தரப்பில் அரசாங்கத்தைக் கூறுவதும் இவர்கள் எவரும் இதற்கு பொறுப்பேற்க தயார் நிலையில் இல்லை என்பதைக் காட்டுகிறது. வர்த்தக சமூக நலத் திட்டமாக இதனை மைதீன் பார்க்கிறது. இத்திட்டத்தில் பணிபுரிந்த ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் நிலை கேள்விக்கு குறியில் உள்ளதாக நஸ்மி தெரிவித்தார்.




# மதம், இனம் கடந்த மிதவாத அரசியல் சிந்தனையை ஐடிஇ முன்னெடுப்பு

இனம் ,மதங்களைக் கடந்த ஒரு மிதவாத அரசியல் முன்னுதாரணத்தை அறிமுகப்படுத்தும் எண்ணத்தை டாருல் எஹ்சான் கல்விக் கழகம் கொண்டுள்ளது. ஒன்றும் மற்றொன்றும் முழுமையான தொடர்பு கொண்ட இரு முக்கிய முன்னெடுப்பு வழியாக இம்முயற்சி தொடரப்பட்டுள்ளது என்று வியூகம் மற்றும் சமூக மேம்பாடு இயக்குனர் டத்தோ சைஃபுதீன் அப்துல்லா தெரிவித்தார்.

ஒன்று பட்டு அமைதியுடன் வாழ்தலும்,பல்லின அரசியல் சிந்தனை மற்றும் மிதவாதம் ஆகிய இரு முக்கிய முன்னெடுப்புகள் இதில் அடங்கும் என்றார். இந்த முயற்சி சுலபமானது ஒன்றல்ல மேலும் காலம் பிடிக்கும். இருப்பினும் குறைந்த பட்சம் இனம் மற்றும் மதம் கடந்த அரசியல் முன்னுதாரணத்தை அறிமுகம் படுத்த டாருல் எஹ்சான் கல்விக் கழகம் முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. எனவே மக்கள் அனைவரும் சமாதானமாகவும் ,இணக்கமாகவும் வாழ முடியும் என்றார் டத்தோ சைஃபுதீன். முன்னதாக ,இன்று , டாருல் எஹ்சான் கல்விக் கழக ஆடிட்டோரியத்தில் நடந்த" பல்லின மக்கள் அரசியல் சிந்தனை மற்றும் மிதவாதம் "வட்டமேசை அமர்வில் (SMB) மதிப்பீட்டாளராகச் செயல்பட்டார். வட்ட மேசைஅமர்வில்,நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலிருந்து கல்விமான்கள் கலந்து கொண்டனர் , டாக்டர் ஜோஹன் சரவணமுத்து மற்றும் பினாங்கு கல்வி கழகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டத்துக் டாக்டர் ஓய்ய் கீ பெங் முதன்மை உரை ஆற்றினர். செர்டாங் பாராளுமன்ற உறுப்பினரான ஓங் கியான் மிங் ,பாரிட் புண்டார் நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் முஜஹித் ரவா மற்றும் ஐடிஇ வாரிய இயக்குனர் , பேராசிரியர் டாக்டர் ஷாஹருதீன் படருதின் ஆகியோர்



# அன்பும் சகோதரத்துவமும் மேலோங்கி இருள் நீங்கி ஒளி பரவட்டும் - மந்திரி பெசார்



தீபாவளியை கொண்டாடும் அனைத்து இந்துக்களுக்கும் சீக்கியர்களும் சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் சார்பில் வாழ்த்தினை தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த தீபாவளி திருநாளில் குடும்பம் சகிதம் ஒன்றிணைந்து சொந்தங்களோடும் நட்புகளோடும் குதுகலமாய் இனிமையான நினைவுகளை மீட்டெடுப்பதும், உறவுகள் மத்தியில் அன்பையும் ஆழமான உறவையும் வலுப்படுத்தவும் தீபத்திருநாள் முதன்மைக் கொள்கிறது.

தீபாவளி என்பது தீமையை அழித்து நன்மையை மெய்பிக்கும் உன்னத திருநாள்.இத்திருநாளில் நாம் அனைவரும் சகோதரத்துவத்தை பேணி நம்மிடையே இருக்கும் இருளினை அகற்றி அன்பும், புரிந்துணர்வும் மற்றும் ஒற்றுமையையும் மேலோங்க செய்வோம். மலேசியா போன்ற பல்லினம் வாழும் நாட்டில் நாம் மதநல்லிணக்கத்தோடும் ஒருவருக்கு ஒருவர் மதித்தும் அன்பை பகிர்ந்தும் உன்னத உறவுகளோடு மெய்பிக்க தீபத்திருநாள் உயிர்ப்பிக்கும்.

இருள் நீங்கி ஒளியூட்டும் இத்திருநாளில் நாட்டின் எதிர்காலமும் இருள் நீங்கி ஒளியால் மிளிரட்டும்.நம்பிக்கையான எதிர்கால மாற்றத்திற்கு தீபத்திருநாளில் ஒளி பிரகாசிக்கட்டும்.

தீபத்திருநாளில் மெய்பிக்கும் வெளிச்சமானது நாளைய தலைமுறைக்கு நம்பிக்கையான மலேசியாவை உருவாக்க வழிகோலும் அதே வேளையில், சிலாங்கூர் அரசாங்கம் இம்மாநிலத்தில் யாரையும் புறக்கணிக்காமல் மக்களுக்கான நலத்திட்டங்களை ஆக்கபூர்வமாகவும் விவேகமாகவும் முன்னெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. சிலாங்கூர் மாநில அரசாங்கம் பல்லின மக்களுக்கான உன்னத அரசாங்கம். இங்கு இம்மாநில வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் எந்தவொரு இனமும் விடுபடவில்லை. மாநில அரசாங்கம் முன்னெடுத்து வரும் ஒவ்வொரு பரிவு மிக்க திட்டங்களும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் உகர்ந்த நிலையையும் அது கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இனம், மதம், கடந்து சிலாங்கூர் அரசாங்கம் மேற்கொண்டு வரும் பரிவு மிக்க மக்கள் நலத்திட்டங்கள் சிலாங்கூர் வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மாற்றி அமைப்பதோடு மட்டுமின்றி சிலாங்கூர் மாநிலத்தின் தனித்துவ சிறப்பாகவும் அது விளங்குகிறது.

சிலாங்கூர் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் நாம் அனைவரும் இனம், மதம், நிறங்களை ஒதுக்கி விட்டு ஒரே சிந்தனையோடு கைகோர்க்க வேண்டும். அப்போதுதான் நாம் சிலாங்கூர் வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை சிறந்த நிலைக்கு கொண்டு செல்ல முடிவதோடு நாளைய தலைமுறைக்கு நம்பிக்கையான புதியதொரு மலேசியாவை அடையாளப்படுத்த முடியும்.

தீபத்திருநாளில் நாம் இச்சிந்தனையினை மெய்பித்தால் நமது தீபாவளி கொண்டாட்டம் மட்டுமில்லை நமது வாழ்க்கையும் நமது தலைமுறைகளின் வாழ்வியலும் நம்பிக்கையான சந்தோசமான இலக்கை நோக்கி நகரும் என்பதில் துளியும் ஐயமில்லை. இந்த இனிய தருணத்தில் சிலாங்கூர் வாழ் இந்துக்கள் மற்றும் சீக்கியர்களோடு மலேசியா வாழ் மக்களுக்கும் தீபத்திருநாள் வாழ்த்தினை தெரிவிப்பதில் பெரும் இன்பம் கொள்கிறேன்.

டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி
சிலாங்கூர் மாநில மந்திரி பெசார்

## ஆட்சிக்குழு உறுப்பினரின் தீபாவளி வாழ்த்துக்கள்



கணபதிராவ் வீரமன்
சிலங்கூர் மாநில ஆட்சிக்குழு உருப்பினர் மற்றும் கோத்தா அலாம் ஷா சட்டமன்ற உருப்பினர்

வணக்கம்,

மலேசியா வாழ் இந்து மக்களுக்கும் பொதுவாக சிலங்கூர் மாநில இந்து மக்கள் அனைவருக்கும் சிலங்கூர் மாநில அரசின் சார்பில் உங்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். இருளை அகற்றி ஒளியை தரும் இந்த தீபவளி திருநாளில் அனைவரும் துன்பம் நீங்கி இன்பம் பெற இறைவனை பிரார்த்திக்கின்றேன். தீப ஒளி அல்லது ஒளி வெள்ளத்தின் பேரணி என்ற பொருள் படும் தீபாவளி திருநாள், மலேசியாவின் முதன்மைக் கொண்டாட்டங்களில் ஒன்று.

இந்துக்கள் மட்டுமல்லாது பல்வேறு மதத்தினரும் சிறப்புற கொண்டாடும் பண்டிகையாக இது திகழ்கிறது. இத்தீபத்திருநாளில் புத்தாடையுடன் புத்துணர்ச்சி கொண்டு புதியதோர் விடியலை நோக்கி நமது சமுதயாம் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புதியதோர் விடியல் என்பது வெறும் பகல் கனவாகமல் அதனை நிரூபிக்க சிலங்கூர் மாநில அரசு அவ்வபோது மக்களின் நலன்கருதி பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகின்றது. 17 மக்கள் நலன் திட்டங்கள் பல்வேறு வயதினருக்கும் மற்றும் இனத்தினருக்கும் பாகுபாடின்றி வழங்கப்பட்டுவருகின்றது.

இதனை நமது சமுதாயத்தினரும் அவர்களின் சட்டமன்ற உருப்பினர்களை அணுகி பெற்றுக்கொள்ள வேண்டும்.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்பு என்பதற்கேற்ப, எங்களின் இந்த 9 வருட ஆட்சியை தேர்ந்தெடுத்து இனிதே செயல்பட ஆதரித்த நீங்கள் தொடர்ந்து எங்களை வரும் காலங்களில் ஆதரித்து வழிநடத்தும்மாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த 2017ம் ஆண்டு தீபாவளி திருநாளில் உங்களை மகிழ்ச்சிசூழவேண்டும் என்று பிரார்திக்கிறேன். இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். வாழ்க வளமுடன்.

நன்றி.

## SK SELANGOR சிலாங்கூர் இன்று — இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

நம் வாழ்வில் தீபங்கள் ஏற்றி வெளிச்சம் கொண்டுவருவதற்கான பண்டிகை தான் தீபாவளி, நண்பர்கள், உறவினர்களோடு சேர்ந்து கொண்டாடபடுவது தீபாவளி, நாம் என்றென்றும் ஒன்று கூடி இருந்து இன்றும் போல் என்றும் நாம் ஒற்றுமையாக இருப்போம்

சிலாங்கூர் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மாத இதழான சிலாங்கூர் இன்று இது வரை தனது இலக்கை அடைய உதவி கரம் நீட்டிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியை சமர்ப்பிக்கிறோம். மலேசியாவில் தமிழுக்கு பெருமை சேர்த்த மாநிலம் சிலாங்கூர் அரசாங்கம் என்றால் அது மிகையாகாது. அனைவரும் தொடர்ந்து சிலாங்கூர் இன்று மாத இதழ் மற்றும் இணைய தளத்தில் பதிவு செய்யும் செய்திகளை மற்றவர்களுக்கும் பரப்பும் நோக்கில் செயல்பட்டால் நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.